# தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 41

தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல்

நன்கொடை உரு.20


## 2026 ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு நடைபெற இருக்கும் 17ஆவது சட்டப்பேரவைத் தேர்தலில் எந்தக் கட்சியைத் தேர்வு செய்யலாம் என்பது குறித்துத் தமிழக மக்கள் முன்னணியும் தோழமை அமைப்புகளும் இணைந்து தமிழகத்தின் பரப்புரைக்கு வெளியிட்ட அறிக்கை.

**பாசிசப் பார்ப்பனிய பாஜகவை முழுமையாகத் தோற்கடிப்போம்!..**
**அதன் ஆரியப் பார்ப்பனியக் கருத்துகளை அடியோடு வேரறுப்போம்!**

**மாநிலங்களின் முற்றுரிமைப் போராட்டங்களுக்குத் துணை நிற்போம்!**

**இந்திய அதிகாரப் பீடங்கள், ஆளுநர்கள் போன்ற அதிகாரத் தளங்களை அடிசாய்ப்போம்!**

**பன்னாட்டு முதலீட்டுச் சுரண்டல்களைத் தடை செய்வோம் !**

**தமிழ்நாட்டின் கனிமப் பொருள்கள், கடல் வளங்கள், நெடுஞ்சாலைத்துறை, வானூர்தி, கப்பல், தொடர்வண்டித் துறை, நீதித்துறை, கல்வி, மருத்துவம் உள்ளிட்ட அனைத்தையும் தமிழ்நாட்டு அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வருவோம்!**

**தமிழே கல்வி மொழி, தமிழே ஆட்சி மொழி, தமிழே பயிற்று மொழி, தமிழே நீதிமன்றமொழி, தமிழே வழிபாட்டு மொழி எனும் நெறிமுறையை உருவாக்குவோம் !**

**இந்தியப் பார்ப்பனிய அதிகாரத்தையும், வல்லாட்சி முதலாளியத்தையும் பாதுகாப்பவர்கள், அவற்றோடு அணி சேர்பவர்கள்**

**அவற்றோடு உறவாடித் தமிழ்நாட்டின் உரிமைகளைக் காவு கொடுப்பவர்கள் ஆகியோரை அம்பலப்படுத்தி எதிர்த்துக் களமாடுவோம்!!**

ஆரியப் பார்ப்பனியம் என்பது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய்த் தமிழை, தமிழ் இனத்தை, தமிழ் நிலத்தைச் சிதைத்துச் சீரழித்து, பல்வேறு மொழிகளாய், இனங்களாய்த் திரித்துக் கொடுமை புரிந்திருக்கிறது.

ஆங்கிலேயர்களின் ஆட்சி அதிகார வெளியேற்றத்திற்குப் பிறகு இந்திய ஆட்சி அதிகாரத்தை வலுவாகக் கைப்பற்றிக் கொண்டு கொடுநெறியில் திமிர் பிடித்து ஆடிவருகிறது ஆரியப் பார்ப்பனியம்.

இந்தியாவிற்குள் அடக்கப்பட்டிருக்கிற பல்வேறு இன மக்களின் வாழ்க்கையைப் பற்றியோ, வேறு எந்த அடையாளங்களைப் பற்றியோ ஒரு சிறிதும் கவலைப்படாமல், அவற்றின் கல்வி உரிமையை நசுக்கி, தேசியக் கல்விக் கொள்கை எனும் பெயரில் நீட் உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளைத் திணிப்பதும், இந்தி, சமஸ்கிருத அதிகாரத்தைத் திணித்து மாநில மொழிகளின் பயன்பாடுகளைத் தடுப்பதும், தொழில் வளங்களைப் பன்னாட்டு முதலாளிய நிறுவனங்களுக்குக் காவுகொடுத்துத் தமிழகத்தின் தொழில் உருவாக்கங்களையும், இயற்கை வளங்களையும் சுரண்டிச் சூறையாடி அவற்றில் பங்கு பெற்றுக் கொழுத்துவருகிறது இந்தியக் கார்ப்பரேட் அரசு.

அதன் செயல் வடிவமாக முன்னர் காங்கிரஸ் கட்சி இருந்தது.. இப்போது அதைவிடப் பன்மடங்கு அதிகார வெறியோடும் சூழ்ச்சிகளோடும் பாரதீய ஜனதா கட்சி இயங்குகிறது..

எனவே, இந்தியாவில் ஒடுக்கப் பட்டிருக்கிற இன மக்களின் அனைத்து உரிமைகளுக்கும் எதிரான பாரதிய ஜனதா கட்சியையும், இந்தியப் பார்ப்பனிய அதிகார வகுப்பைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிற அதிமுக உள்ளிட்ட அதன் கூட்டணிக் கட்சிகளையும் சமரசமின்றி எதிர்த்து வீழ்த்தியாக வேண்டும். எதிர்வரும் தேர்தலில் அதிமுக - பாரதீய ஜனதாக் . கூட்டணியைக் கட்டுத்தொகை கூடப் பெற முடியாதபடி அவர்களைத் தோற்கடித்தாக வேண்டும்.

**அடுத்து, முதன்மைப் பகைக்கு முட்டுத்தாங்குகிறவர்களைப்பற்றி...**

ஏறத்தாழ 80 ஆண்டுகளுக்கும் மேலாகப் படிப்படியாகப் போராட்டங்களின் ஊடாக வளர்ந்து வந்திருக்கும் தமிழ்நாட்டு விடுதலை அரசியல் கொள்கையை வலியுறுத்திப் பல இன்னல்களை ஏற்று வந்த கட்சிகள் மற்றும் இயக்கங்களின் கருத்துகளில், செயல்பாடுகளில் தங்களுக்கு எவ்வித இன்னலும் தராதவற்றை மட்டும் தேர்ந்தெடுத்துத் தன்வயமாக்கிக் கொண்டு பேசிவருகிறார் சீமான்.

தவிரவும், அவற்றையெல்லாம் தானே முன்மொழிவது போல், உலகெங்கும் பரப்பித் தமிழர்களிடம் ஏமாற்றி அவர்களின் ஆதரவினால் தன்னையும் தன் கட்சியின் தலைவர்கள் சிலரையும் வளப்படுத்திக் கொண்டு வருகிறார். மேலும் , தமிழ்த் தேச விடுதலை அரசியலை, இந்திய அரசுக்கு அடிமைத்தன்மை உடையதாகவும், ஆரியப் பார்ப்பனியத்தின் அடிவருடி அரசியலாகவும் மாற்றி வருகிறார்.

இந்தியப் பார்ப்பனியக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளவர்களை நட்பாக்கிக் கொண்டு, நட்பு ஆற்றல்களாகக் கொள்ள வேண்டிய ஏற்ற இறக்கமாக மாநில உரிமைகள் பேசும் கட்சிகளை முதன்மைப் பகை என ஆரியப் பார்ப்பனியச் சார்பில் சுட்டிக்காட்டி, அதையும் பிராமணக் கடப்பாரையைக் கொண்டு இடிப்பதாகக் கொக்கரித்துப் பொய்மைத் தமிழ்த்தேசம் பேசுகிற சீமானின் நாம் தமிழர் கட்சியையும் தமிழ்நாட்டு மக்களிடையே அம்பலப்படுத்தித் தோல்வியடைய வைக்க வேண்டிய கடமை தமிழ்த் தேசிய அரசியலாளர்களுக்கு இருக்கிறது..

**திரைப்பட மயக்கம் தீர்வாகுமா?**

எவ்வகை அரசியல் அறிவும் இல்லாத, திரைத்துறை மயக்கம் மட்டுமே கொண்டு, விளம்பர விரும்பியாகவும், அரசியல் பதவி விருப்பத்தோடும் இலக்கில்லாமல், தேர்தல் அரசியலில் இதுவரை ஈடுபட்டு வந்த ஒட்டுண்ணிகள் சிலரை உடன் வைத்துக் கொண்டு தமிழ்நாட்டு அரசியலில் நுழைந்து தமிழ்நாட்டு இளைஞர்களின் அறிவை மழுங்கடிக்க வந்திருக்கிற நடிகர் விஜயின் தமிழக வெற்றிக் கழகத்தையும் தமிழ்நாட்டு மக்கள் புறந்தள்ளி அரசியல் அரங்குகளிலிருந்தே வெளியேற்றிட வேண்டும்.

**நிலையான தீர்வு எப்பொழுது ?**

இன்றைய தேர்தல் அமைப்பு முறைகளின் வழியாகச் சட்டமன்றங்களில் நாடாளுமன்றங்களில் கட்சிகள் மாறி மாறி ஆட்சி செய்து வருவதால் காட்சிகள் மாறுமே அன்றி, இந்தியப் பார்ப்பனிய அரசின் அதிகாரங்களையோ, பன்னாட்டு முதலாளிகளின் சுரண்டல் சூறையாடல்களையோ முழுமையாக ஒழித்து விட முடியாது..

ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநிலங்களின் தன்னாட்சி அதிகார உரிமைகளுக்காகப் போராடுவதின் வழியாகவே அவற்றை முழுமையாக வீழ்த்த முடியும்..

**பகைவர்களை அம்பலப்படுத்தும் தேர்தல் வாய்ப்பு..**

நிலையான மாற்றம் வரும்வரை அதிகார வெறியர்களை, பொய்மைத் தமிழ்த் தேசியர்களை அம்பலப்படுத்துவதற்காக எல்லாக் களங்களிலும் போராட்டங்களும் கலகங்களும் நடைபெற்றாக வேண்டும்..

இன்றைய சட்டமன்றங்களையும், நாடாளுமன்றங்களையும் மாநிலங்களின் உரிமைகளை மீட்டுப் பெறுவதற்கான போராட்டக் களங்களாகப் பயன்படுத்தலாமே அல்லாமல், தான் முதலமைச்சராக வந்துவிட்டால் ஒரே இரவில் ஒரே பொழுதில் அனைத்தையும் மாற்றி விடுவேன் என்றெல்லாம் சீமானோ, விஜயோ கதையளப்பது மக்களை ஏமாற்றுவதே ஆகும்..

**தோழமை அமைப்புகளின் ஒற்றுமை.**

இந்தப் பின்னணியில் தேசிய இனங்களின் உரிமைகளைப் பெறுவதற்கு அந்தந்தத் தேசத்திற்குள் இருக்கிற அனைத்துக் கட்சிகளையும், இயக்கங்களையும் நட்பு அணியினராக ஒன்று சேர்க்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இந்நிலையில், மேலே குறிப்பிடப்பட்ட கட்சிகள் அல்லாது, தமிழ் உரிமைகளுக்காக, தமிழ் இன உரிமைகளுக்காக, தமிழ்நாட்டின் முற்றதிகார உரிமைகளுக்காகக் குறைந்த அளவிலாவது செவி சாய்க்கிற, ஆதரவளிக்கிற கட்சிகளிடம் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு இயக்கங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளே கீழே உள்ளவை........

- **ஆரியப் பார்ப்பனிய அதிகார வெறியை எதிர்ப்பதோடு தமிழிய அற உணர்வு சார்ந்த மார்க்சிய, பெரியாரிய, அம்பேத்கரியக் கோட்பாடுகளை ஏற்பவர்களை ஆதரிப்பது.**
- **ஆளுநர் அமைப்பு முறையை முற்றாக ஒழிக்கப் போராட வேண்டும்**
- **இந்தி / சமசுக்கிருத ஆதிக்கத்தை முற்றிலும் ஒழிக்க உடனடியாக உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.**
- **கல்வித்துறையின் அதிகாரம் முழுமையும்(தொடக்கக் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை) தமிழ்நாட்டு அரசின் அதிகாரத்தின் கீழேயே கொண்டு வர வேண்டும்.**
- **தமிழ்நாட்டிற்குத் தர வேண்டிய நிலுவையிலுள்ள அனைத்து நிதியையும் உடனடியாக ஒன்றிய அரசு வழங்கியாக வேண்டும். ஜிஎஸ்டி முறையை முற்றிலும் நீக்கம் செய்து விட்டு, வரி வசூலிக்கும் உரிமை அந்தந்த மாநிலங்களுக்கே உண்டு எனும் நிதி மேலாண்மையை நிறுவிட வேண்டும்.**
- **தமிழ்நாட்டில் இயங்கும் இந்திய அரசின் சுங்கச்சாவடிகள் அனைத்தையும் முழுமையாக நீக்க வேண்டும்.**
- **ஆணவப் படுகொலைகளுக்குக் கடும் சட்டம் இயற்றித் தடை செய்வதோடு, சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குச் சிறப்புகள் செய்யவும், அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிப்பதோடு, அவர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு கொடுக்கவும், சாதி, மதம் இல்லை என்று அவர்கள் பதிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தித் தரவும் வேண்டும். மேலும், காவல் நிலைய படுகொலைகளுக்கு எதிராகவும் கடும் சட்டங்கள் இயற்றித் தடை செய்ய வேண்டும்.**
- **திருக்குறளைத் தமிழ்நாட்டின் தேசிய நூலாகவும், திருவள்ளுவரைத் தமிழ்நாட்டின் தேசியப் பாவலராகவும் அறிவிக்க வேண்டும்.**
- **மூடநம்பிக்கைகள், சாதிச் சங்கங்கள் ஆகியவற்றை ஒழித்துக் கட்டும் சட்டங்கள் உடனடியாக நிறைவேற்றிட வேண்டும்.**
- **இந்திய அரசு கொண்டு வந்த தொழிலாளர் சட்டங்களைப் புறக்கணித்துத் தமிழ்நாட்டிற்கான தனித்த தொழிலாளர் நலன் சார்ந்த சட்டங்களை இயற்றிடல் வேண்டும். என் ஐ ஏ போன்ற மாநில உரிமைகளில் தலையிடும் முகமைகளை ஏற்க மறுத்து ஆள் தூக்கிச் சட்டங்களை எதிர்க்கவும் முன் வர வேண்டும்.**

- குறைந்த அளவு இந்த 10 கோரிக்கைகளை உண்மையாகவே நிறைவேற்ற முயலுவதான வகையில் மாநில உரிமைகளை மீட்டெடுக்க உறுதி கூறும் கட்சிகளுக்கு - கூட்டணிக்கு வருகிற சட்டமன்றத் தேர்தலில் வாக்களிக்கலாம், ஆதரவு அளிக்கலாம் என்று கீழ்காணும் இயக்கங்கள் கூட்டாக மக்களிடம் கோரிக்கை வைக்கின்றன.

**பொழிலன்** (முதன்மை ஒருங்கிணைப்பாளர்)
**பேராசிரியர் த. செயராமன்**
(த. ம. முன்னணி - தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்)
**கண. குறிஞ்சி** (த.ம.முன்னணி – தமிழ்நாடு மக்கள் உரிமைப் பேரவை)
**நிலவழகன்** (த. ம. முன்னணி - மக்கள் தமிழகம் கட்சி)
**தங்க.குமரவேல்** (த.ம.முன்னணி -தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம்)
**பாவெல்** (தமிழக மக்கள் முன்னணி)
**சுப்பு.மகேசு** (த. ம. முன்னணி - தமிழர் உரிமைக் கழகம்)
**நாகேசுவரன்** (த. ம. முன்னணி - பெரியார் பேரவை)
**செள. சுந்தரமூர்த்தி** (த. ம. முன்னணி - தமிழர் விடுதலைக் கழகம்)
**தெய்வ மணி** (த. ம. முன்னணி - அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கம்)
**கோப்பெருஞ்சோழன்**
(த. ம. முன்னணி - தமிழ்த் தேசிய மக்கள் விடுதலைக் கழகம்)
**மதியவன் இரும்பொறை** (தமிழ்த் தேச மார்க்சியக் கழகம்)
**க. இரா. தமிழரசன்** (தமிழ்த் தேசக் குடியரசு இயக்கம்)
**தேவதாசு** (ஐந்திணை மக்கள் கட்சி)
**குணசேகரன்** (சாமானிய மக்கள் கட்சி
**காந்தி** (தமிழ்த் தேசிய மீட்சி இயக்கம்)

# பாரதிய பாஷா பரிவார் - பாஜக-வின் பொய்யும் புரட்டும்..

## பழ. நெடுமாறன் அவர்களின் எச்சரிக்கை!

**சரசுவதியின் சபதம் என்று ஒரு திரைப்படம். சிவாஜி கணேசன் நடித்தது. எது சிறந்தது கல்வியா? செல்வமா? வீரமா? என்ற கேள்வியை நடுவாக வைத்து அந்தத் திரைப்படம் எடுக்கப்பட்டிருக்கும்.ஆனால் இன்று என்னிடம் அந்தக் கேள்வியைக் கேட்டால் நான் சிறந்தது அதிகாரம் என்று தான் சொல்லுவேன். ஏனென்றால் அதிகாரம் என்னிடம் இருந்தால் கல்வி எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை நான் தீர்மானிக்க முடியும். யாரிடம் பணம் சேர வேண்டும் என்பதையும், எது வீரம் என்பதையும் நான் முடிவு செய்ய முடியும்.**

**அதனால் தான் அதிகாரம் தான் சிறந்தது என்று சொல்லுவேன். அண்மையில் பாரதிய பாஷா சமிதி என்ற அமைப்பைப் பற்றியும் அதன் வெளியீடுகள் பற்றியும் கேள்விப்பட்ட பொழுது மேற்படி சிந்தனைதான் எனக்கு வந்தது. அந்த சிந்தனையின் சிறு விளைவுதான் இந்தக் கட்டுரை.**

பாரதிய பாஷா சமிதி அமைப்பு 2021 - ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த அமைப்பு இந்திய மொழிகளை மேம்படுத்துவதற்கான உயர் அதிகாரம் கொண்ட குழு ஆகும். இது இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தால் நடத்தப்படுகிறது. இது தேசிய கல்விக் கொள்கை 2020 ஐ திட்டமிடப்பட்டுள்ளபடி இந்திய மொழிகளின் முழுமையான மற்றும் பல- ஒழுங்கு வளர்ச்சியின் பாதைகளை ஆராய்ந்து பரிந்துரைக்கும் குழு ஆகும். தற்போதுள்ள மொழி கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிக்குப் புத்துயிர் அளிப்பது மற்றும் நாட்டில் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில் அதன் விரிவாக்கம் தொடர்பான அனைத்துச் செயல்பாடுகளிலும் அமைச்சகத்திற்குக் கருத்தை வழங்கும் குழு ஆகும்.

தனக்கு ஒதுக்கப்பட்ட பணிகளைச் செய்ய, பாரதிய பாஷா சமிதி உயர் அதிகாரக் குழு, துணைக் குழுக்கள்/ ஆய்வுக் குழுக்களை அமைத்துக் கொள்ளலாம் . இந்திய மொழிகளின் மேம்பாட்டின் தேவையை எடுத்துரைக்கக் குழு கருத்தரங்குகள், பயிலரங்குகள், மாநாடுகள் மற்றும் மெய்நிகர் மாநாடுகளுக்கு ஏற்பாடு செய்யலாம். மொழிகளின் கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம்/ மேம்படுத்துதல் ஆகியவற்றைக் கையாளும் நடுவண் மற்றும் மாநில அரசின் எந்தவொரு நிறுவனத்துடனும் இது தொடர்பு கொள்ளலாம் மற்றும் ஒருங்கிணைக்கலாம்.

1.இந்த அமைப்பு 2025- ஆம் ஆண்டில் இரு முதன்மையான நூல்களை வெளியிட்டுள்ளது: அவை

**1. பாரதிய பாஷா பரிவார்: மொழியியலில் ஒரு புதிய கட்டமைப்பு**

**2. பாரதிய பாஷா பரிவார்: தொகுக்கப்பட்ட ஆய்வுகள் எல்லைகளும் முன்னோக்குகளும்**

இந்நூல்களில், இந்திய மொழிகள் குறித்த மேற்கத்திய வகைப்பாட்டை மறு ஆய்வு செய்து, "பாரதிய பாஷா பரிவார்" என்ற புதிய கட்டமைப்பை முன்வைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளன.

**2. நூல்களின் உள்ளடக்கம் -மேலோட்டம்**

**2.1 பாரதிய பாஷா பரிவார்: மொழியியலில் ஒரு புதிய கட்டமைப்பு**

இந்நூல், 18- 19 ஆம் நூற்றாண்டுகளில் உருவாக்கப்பட்ட மொழி வகைப்பாடுகளை (இந்தோ□ஐரோப்பியம், திராவிடம் எனப் பிரித்தது) எதிர்க்கிறது. காலனித்துவ மொழியியலாளர்களான வில்லியம் ஜோன்ஸ், இராபர்ட் கால்டுவெல் போன்றோரின் பிரிப்புவாதக் கட்டமைப்புகளுக்கு மாற்றாக, அனைத்து இந்திய மொழிகளும் ஒன்றோடொன்று இணைந்த ஒரு பெரும் குடும்பம் எனும் பார்வையை முன்வைக்கிறது.

**2.2 பாரதிய பாஷா பரிவார்: தொகுக்கப்பட்ட ஆய்வுகள் எல்லைகளும் முன்னோக்குகளும்**

590 பக்கங்கள் கொண்ட இத்தொகுப்பில், இந்தியா முழுவதும் உள்ள மொழியியல் அறிஞர்கள், ஆய்வாளர்கள் எழுதிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பெயர்ச்சொற்கள், இலக்கணக் கட்டமைப்புகள், ஒலியியல் ஒற்றுமைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு, இந்திய மொழிகளின் ஒருங்கிணைவை நிறுவ முயல்கிறது.

**3. நூல்களின் பின்னணியில் உள்ள மூன்று அரசியல் குறிக்கோள்கள்**

பாரதிய பாஷா சமிதியும் அதன் நூல்களும், மொழியியல் ஆய்வு என்ற போர்வையில், மூன்று அரசியல்- கல்வி நோக்கங்களை முன்னிறுத்துவதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

**1.சமற்கிருதம் அனைத்து இந்திய மொழிகளுக்கும் தாய் என நிறுவுதல்**

"அனைத்து இந்திய மொழிகளும் ஒரே குடும்பம்" என்று கூறும்போது, அந்தக் குடும்பத்தின் மூத்த உறுப்பினராகச் சமற்கிருதத்தை முன்வைக்கும் முயற்சி இதில் உள்ளது. தமிழிய மொழிகள், முண்டா மொழிகள் போன்றவற்றுக்கும் சமற்கிருதமே மூலம் என்ற கருத்து மறைமுகமாக முன்னிறுத்தப்படுகிறது.

**2.ஆரியர்கள் வெளியில் இருந்து வந்தவர்கள் அல்லர் இந்திய பழங்குடியினர் என நிறுவுதல்**

• Out of India Theory (OIT) என்றழைக்கப்படும் இக்கோட்பாடு, ஆரியர்கள் இந்தியாவிலேயே தோன்றி வளர்ந்தவர்கள் என்றும், இங்கிருந்தே ஐரோப்பாவிற்குப் பரவியிருக்க வேண்டும் என்றும் வாதிடுகிறது.

• இது Aryan Invasion Theory (ஆரியப் படையெடுப்புக் கோட்பாடு)க்கு மாற்றாக முன்வைக்கப்படும் தேசியவாதக் கருத்தாக்கமாகும். இந்த நூல்கள் இக்கோட்பாட்டை வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன

**3.சமற்கிருதமே ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் தாய் என நிறுவுதல்**

18ஆம் நூற்றாண்டில் வில்லியம் ஜோன்ஸ் கண்டுபிடித்தது, சமற்கிருதமும் கிரேக்கமும் இலத்தீனும் ஒரே மூலத்திலிருந்து (Proto-Indo-European) வந்தவை என்பதே. ஆனால் இந்த நூல்கள், அந்த ஒரே மூலமே சமற்கிருதம்தான் என்ற நிலைக்கு மேலும் நகர முயல்கின்றன. இது உலக மொழியியல் அறிஞர்களால் நீண்ட காலமாக மறுக்கப்பட்ட ஒரு கருத்தாகும்.

**4.மொழியியல். அறிஞர்கள். பார்வைகள்**

**4.1.அறிவியல் முறைமை மீறல்கள்**

1. துறை சார்ந்த அறிஞர்களின்மதிப்பீடு (peer review) இல்லை: கல்வி ஆய்வுக்கு அடிப்படைத் தேவையான மதிப்பீட்டு செயல்முறை இந்த நூல்களில் பின்பற்றப்படவில்லை. ஒரு பங்களிப்பாளர் குறிப்பிட்டிருப்பதுபோல், "இதை ஒரு ஆய்வு எனச் சொல்ல முடியாது; இது ஒரு அறிக்கை (report) என்று மட்டுமே

சொல்ல முடியும்

ஆசிரியர் உரிமை மீறல்: முதல் நூலில், ஐந்து பகுதிகளில் எந்த ஒரு பகுதியிலும் அதை எழுதிய ஆசிரியரின் பெயர் இடம்பெறவில்லை. பங்களிப்பாளர்களின் பெயர்கள் பொதுப் பட்டியலில் மட்டும் தரப்பட்டுள்ளன. இது கல்வி நெறிமுறைகளுக்கு எதிரானதாக அறிஞர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

#### 4.2 "குடும்பம்" என்ற கருத்தாக்கமே காலனிய மரபுதான்

மொழியியலாளர் சமீர் கர்மாக்கர் (ஜாதவ்பூர் பல்கலைக்கழகம்) கூறுவதுபோல், "குடும்பம்" (family) என்ற உருவகம் 18□19 ஆம் நூற்றாண்டு ஐரோப்பிய மொழியியலில் உருவானது. இந்திய மரபில் இல்லாத இந்தக் கருவியையே மீண்டும் பயன்படுத்துவதும், அதே சமயம் "காலனித்துவ மொழியியலை மறுப்பதாக" கூறிக்கொள்வதும் முரண்பாடாக உள்ளது.

#### 4.3 "மரம்" மாதிரியிலிருந்து விடுபடவில்லை

பேராசிரியர் பி. ஸ்ரீகுமார் (கேரள மத்தியப் பல்கலைக்கழகம்) இந்த நூல்களைத் திறனாய்வு வகையில் "பாரதிய பாஷா வன்" (Indian Language Forest) என்ற மாற்றுக் கருத்தை முன்வைக்கிறார். ஒரு காட்டில் பல்வேறு மரங்களும், கொடிகளும் பின்னிப் பிணைந்து வளர்வது போலத்தான் இந்திய மொழிகள். அவற்றை ஒற்றைக் கருவில் இருந்து வந்தவையாகக் கட்டாயப்படுத்தாமல், "தொடர்பு" (contact) மற்றும் "ஒருங்கிணைவை" (convergence) நடுவப்படுத்துவதே சரியான அணுகுமுறை என அவர் குறிப்பிடுகிறார்.

#### 4.4 புறக்கணிக்கப்பட்ட மொழிக் குடும்பங்கள்

இந்தியாவில் இந்தோ - ஆரியம், திராவிடம் மட்டுமின்றி ஆஸ்ட்ரோ - ஏசியாடிக் (முண்டா) மற்றும் திபெத்திய - பர்மியம் போன்ற மொழிக் குடும்பங்களும் உள்ளன. "ஒரே குடும்பம்" என்ற கட்டமைப்பு, இவற்றை எங்கு வைக்கிறது என்பதில் தெளிவு இல்லை. இவை பெரும்பாலும் குறிப்பிடப்படாமல் அல்லது விளிம்பில் வைக்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

#### 5. இம் மூன்று குறிக்கோள்களின் அறிவியல் நிலை

குறிக்கோள்: உலகளாவிய மொழியியல் அறிஞர்களின் நிலைப்பாடு சமற்கிருதம் = அனைத்து இந்திய மொழிகளின் தாய் என்ற கூற்று முழுக்க மறுக்கப்பட்டது. திராவிட மொழிகள் தனி மூலத்தைக் கொண்டவை; முண்டா, திபெத்திய- பர்மிய மொழிகள் முற்றிலும் மாறுபட்ட குடும்பங்களைச் சேர்ந்தவை.

ஆரியர்கள் இந்தியப் பழங்குடியினர் என்பது பெரும்பான்மை அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மொழியியல், தொல்பொருள், மரபியல் கூறுகள் இந்தோ□ஐரோப்பிய மொழிகளின் தாயகம் பொன்டிக்□கேஸ்பியன் புல்வெளி (தற்கால உக்ரைன், ரஷ்யா பகுதி) என்பதையே சுட்டுகின்றன.

சமற்கிருதமே ஐரோப்பிய மொழிகளின் தாய் என்ற கூற்று முற்றாக மறுக்கப்பட்டது. சமற்கிருதமும், கிரேக்கமும், இலத்தீனும் ஒரே மூலத்தின் (PIE) வெவ்வேறு கிளைகள். எந்த ஒரு மொழியும் மற்றதற்குத் தாய் அல்ல.

#### 6. "இந்திய மொழிப் பகுதி" ஒரு மாற்று அணுகுமுறை

1956- ஆம் ஆண்டில் அமெரிக்க மொழியியலாளர் முர்ரே எமெனோ (Murray Emeneau) "India as a Linguistic Area" என்ற கருத்தை முன்வைத்தார். வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்த இந்திய மொழிகள், ஆயிரக்கணக்கான ஆண்டுக்காலத் தொடர்பால் ஒரே மாதிரியான இலக்கணக் கட்டமைப்புகளைப் பகிர்ந்து கொள்கின்றன என்பது இதன் சாரம்.

"ஒரே குடும்பம்" (same family) என்பதற்கும், "ஒரே மொழிப் பகுதியாகச் செயல்படுகின்றன" (function as a single linguistic area) என்பதற்கும் பெரும் வேறுபாடு உண்டு. பாரதிய பாஷா சமிதியின் நூல்கள் முன்னையதை நிறுவ முயல்கின்றன; ஆனால் பெரும்பாலான மொழியியலாளர்கள் பின்னையதையே ஏற்றுக்கொள்கின்றனர்.

#### 7. கல்வி நெறிமுறைகளும் முரண்பாடுகளும்.

இந்த நூல்கள் வெளிவந்த வகையே கல்வி வட்டாரங்களில் கடும் குற்ற சாட்டுகளைச் சந்தித்துள்ளது.

• Out of India Theory- யை முன்வைத்து முன்னர் வெளியான நிக்கோலஸ் கசானாஸின் ஆய்விலும், அதன் ஆசிரியர் ஜே.பி.மல்லோரி, வழக்கமான peer review செயல்முறையை வேண்டுமென்றே தவிர்த்ததாக ஒப்புக்கொண்டிருந்தார்.

• பாரதிய பாஷா சமிதியின் இந்நூல்களும் இதே பாதையில், கல்வி நெறிமுறைகளைப் புறந்தள்ளி, கொள்கை அளவிலான நோக்கங்களை முன்னிறுத்துவதாக அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர் .

#### 8. முடிவு: அறிவியலா, அரசியலா?

பாரதிய பாஷா சமிதியும் அதன் இரு நூல்களும், மொழியியல் துறையில் "புதிய கட்டமைப்பு" ஒன்றை அறிமுகப்படுத்துவதாக முன்வந்துள்ளன. ஆனால் அறிவியல் முறைமை (துறைசார் மதிப்பீடு, ஆசிரியர் உரிமை, தரவுகளின் வெளிப்படைத்தன்மை) போதுமான அளவு பின்பற்றப்படவில்லை.

• முன்வைக்கப்படும் "பாரதிய பாஷா பரிவார்" கருத்து, மொழியியல் வகைப்பாட்டின் சிக்கல்களைச் சுட்டிக்காட்டினாலும், அதே "குடும்பம், மரம்" என்ற உருவகங்களையே மீண்டும் பயன்படுத்துகிறது.

• மூன்று அரசியல் நோக்கங்கள் இதன் பின்னணியில் இயங்குவதை ஆய்வுகள் தெளிவாகக் காட்டுகின்றன:

1. சமற்கிருதத்தை அனைத்து இந்திய மொழிகளுக்கும் தாயாக நிறுவுதல்
2. ஆரியர்களை இந்தியப் பழங்குடியினர் என நிறுவுதல்
3. சமற்கிருதத்தை உலகின் தாய்மொழியாக உயர்த்துதல்

இந்த மூன்றும் Out of India Theory என்ற ஒருங்கிணைந்த கருத்தாக்கத்தின் பகுதிகளாகும். உலக அளவிலான மொழியியல், தொல்பொருள், மரபியல் ஆய்வுகளின் பெரும்பான்மைக் கருத்தால் இவை புறக்கணிக்கப்பட்டவை.

இந்நூல்கள் அறிவியல் முடிவுகளை விட, ஒரு குறிப்பிட்ட தேசியவாத கருத்தியலின் கல்வி மற்றும் பண்பாட்டுநிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாகவே கருதப்பட வேண்டும்.

இந்திய மொழிகளின் ஒருங்கிணைவு, அவற்றுக்கிடையேயான தொடர்பு, ஆயிரக்கணக்கான ஆண்டுக்காலப் பரிமாற்றம் ரூ இவை அனைத்தும் ஆய்வுக்கு உரிய முக்கியமான புலமாகும். ஆனால், அத்தகைய ஆய்வு அறிவியல் நெறிமுறைகளுக்கு உட்பட்டும், அனைத்து மொழிக் குடும்பங்களையும் சமமாக உள்ளடக்கியும் அமைய வேண்டும்.

ஆனால் அவை அனைத்தும் அதிகாரம் உள்ளன என்ற ஒரே காரணத்தினால் எதை வேண்டுமானாலும் நிறுவலாம் நாம் நினைப்பது தான் வரலாறு நாம் நினைப்பதுதான் அறிவியல் என்ற நோக்கத்தை தான் இந்த பாரதிய பாஷா சமிதி என்ற அமைப்பின் நோக்கமும் அதன் நூல்களும் தெளிவு படுத்துகின்றன இத்தகைய முயற்சிகளை இப்படியே நீடிக்க விட்டால் தமிழ் தன்னை தக்க வைத்துக் கொள்ளும் ஆனால் தமிழர்கள்தான் தமிழ்நாட்டில் இருக்க மாட்டார்கள் ஏனென்றால் அவர்கள் ஆரிய பிராமணியக் கருத்தியல் நோயளிகளாக மாற்றப்பட்டுக் கொண்டு இருப்பார்கள்.

*(கடந்த மார்ச்சு 21 -அன்று சென்னையில் நடைபெற்ற சமசுக்கிருதத்திற்குத் தமிழின் கொடை - இரண்டாம் ஆய்வரங்கில் ஐயா பழ.நெடுமாறன் அவர்கள் ஆற்றிய உரையின் கருத்துகளைப் பெயர்த்து முகவுரையுடன் எழுதியது.)*

**இளையினன்**

# 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் நாம் என்ன செய்ய வேண்டும்?

● தங்க. குமரவேல்

அன்பார்ந்த உழைக்கும் சொந்தங்களே! விடுதலைப் போராளிகளே!

2026 ஏப்ரல் 23 ஆம் நாள் தமிழ்நாட்டின் சட்ட மன்றத்திற்குத் தேர்தல் நடைபெற உள்ளது. வழக்கம் போல தேர்தல் திருவிழாவில் பேரம் பேசும் கூட்டணிகளும் கோமாளிக் கூத்தணிகளும் தேர்தலைச் சந்திக்க அவரவர் கோணத்தில் அணியமாகி வருகின்றன. குதிரை பேரம், கழுதை பேரம் எனப் பெரும் மாட்டுச் சந்தை போல தேர்தல் சந்தை உருவாகி உள்ளது. கால்நடைச் சந்தையில் கொண்டு வரப்பட்ட விலங்குகள் கத்திக்கொண்டு எதற்காக வந்தோம் என்று வேடிக்கை பார்ப்பது போல் மக்கள் யாருக்கு வாக்களிப்பது என்று தெரியாமல் விழிப்பிதுங்கி நிற்கிறார்கள்.

பருவ மழைக்காலத்தில் பூத்திடும் புற்றீசல் போல தேர்தல் பருவக் காலத்தில் பல்வேறு புதிய கட்சிகள் முளைத்து எழுகின்றன. அரசியல் என்றால் என்னவென்றே தெரியாத அரைவேக்காடுகளும் களத்தில் நிற்கின்றன.

பாதி மக்கள் நலத்தையும் பாதி கார்ப்பரேட் நலத்தையும் பின்னணியாகக் கொண்ட திமுக அதன் கூட்டணிக் கட்சிகள் உருவாக்கிய இந்தியா கூட்டணி ஒருபுறம்!

அப்பாவி எடப்பாடி பண்ணையார் பாஜகவுக்கு அடிபணிந்து உருவாக்கிய தேசிய சனநாயகக் கூட்டணி மறுபக்கம்! இவை இரண்டிற்கும் இடையில் தவெக, நாதக போன்ற கூத்தணிகள் இன்னொரு புறம்! மாற்றத்தை விரும்பும் மக்களோ தேசிய உரிமைகள் கொண்ட 'சோசலிசமே மாற்று' என்று அறியாமல் ஏமாற்றும் கூட்டங்களுக்கே மாற்றி மாற்றி வாக்களிக்கின்றனர். இந்நிலையில் தேர்தல் குறித்து சில கேள்விகளை முன் வைக்கின்றோம்.

"நீ அரசியலில் தலையிடாவிட்டால் நீ வெறுக்கும் அரசியலால் ஆளப்படுவாய்" என்னும் ஆசான் லெனின் கூற்றுக்கு இணங்க நாம் இந்த அரசியலில் தலையிடுகிறோம். ஆனால் பங்கேற்பது இல்லை! தந்தை பெரியாரின் திராவிடர் கழகம் தேர்தல் குறித்த தனது நிலைப்பாட்டைக் கூறுமே தவிர தேர்தலில் பங்கெடுக்காது. அந்த நிலைப்பாட்டில் இருந்தும் நாம் தேர்தலை அணுகுகிறோம்.

சோவியத் ரஷ்யாவில் டூமா என்னும் நாடாளுமன்றத்தில் பங்கெடுப்பதன் வாயிலாக புரட்சிகர நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என எண்ணிய தோழர் லெனின் அவர்கள் பின்னர் அது பயனற்றது என உணர்ந்து ஆயுதப் புரட்சிப் பாதையைத் தேர்ந்தெடுத்தார். அது நடந்த பின்னரும் லெனினின் டூமா நுழைவைக் காரணம் காட்டி இந்தியாவில் நாடாளுமன்றப் பாதையைத் தேர்ந்தெடுத்த சிபிஐ, சிபிஎம்,சிபிஐஎம்எல் உள்ளிட்ட தேர்தல் இடதுசாரிக் கட்சிகளை நோக்கியே எமது நிலைப்பாட்டை முன் வைக்கின்றோம்.

முதலாளித்துவக் கட்டமைப்பிலும் ஏகாதிபத்திய காலகட்டத்திலும் இயங்கிக் கொண்டு இருக்கும் தேர்தல் சனநாயகத்தால் மக்களுக்குச் சில சீர்திருத்தங்கள் செய்து தர முடியுமே தவிர மக்கள் அனைவருக்கும் அனைத்து உரிமைகளையும் தரும் சோசலிசத்தைக் கட்டமைக்க ஒருகாலும் முடியாது. எனவே நாம் நாடாளுமன்றத் தேர்தல் சனநாயகப் பாதையை ஏற்பதில்லை. புரட்சிகரப் பாதையை மட்டுமே ஏற்கிறோம்.

ஆனால் தேர்தல் பங்கேற்பு என்னும் முடிவுக்கு வந்துவிட்ட இந்திய இடதுசாரிக் கட்சிகளை நோக்கி யாம் சில கேள்விகளை முன்வைக்க வேண்டியுள்ளது.

சிபிஐ, சிபிஎம், சிபிஐஎம்எல் உள்ளிட்ட பல்வேறு இடதுசாரிக் கட்சிகள் தேர்தல் பாதையைத் தேர்ந்தெடுத்து உள்ளன. அதிலாவது அந்தக் கட்சிகள் சரியான பாதையில் செல்கின்றனவா என்று ஆராய வேண்டி உள்ளது.

1925 என்பது இந்திய வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். அந்த ஆண்டில்தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஆர் எஸ் எஸ், சுயமரியாதை இயக்கம் ஆகியவை தொடங்கப்பட்டன. இந்த மூன்று இயக்கங்களும் 2025- இல் நூற்றாண்டு கண்டன. ஆனால் இந்த மூன்றின் வளர்ச்சிப் போக்கு என்னவாக இருக்கிறது என்று ஆராய்ந்தால் இந்தியாவில் புரட்சி வராததற்கான காரணம் புரியும்.

ஆர் எஸ் எஸ் அமைப்பு வலதுசாரி, இந்துத்துவ, மதவாதக் கொள்கையைக் கொண்டதாகும். இதன் நோக்கங்களை நிறைவேற்றும் தேர்தல் அரசியல் பிரிவே பாஜக ஆகும். அது சரியான திட்டமிடுதல்களோடும் தொடர் செயல்பாடுகளோடும் களப்பணியாற்றி இன்று இந்திய ஒன்றிய ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துள்ளது.

1925 இல் சென்னை மாகாணத்தில் தந்தை பெரியார், பிட்டி.தியாகராயர், ஏ.டி பன்னீர்ச்செல்வம், டி.எம் நாயர், சௌந்தரபாண்டியன், அன்னை மீனாம்பாள் உள்ளிட்ட பல தலைமை ஆளுமையர்களால் சுயமரியாதை இயக்கம் தொடங்கி நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 1944- இல் தந்தை பெரியாரால் நீதிக் கட்சியும், சுயமரியாதை இயக்கமும் இணைக்கப்பட்டு திராவிடர் கழகமாக உருவெடுத்தது. சமூக நீதி, பெண் விடுதலை, சாதி ஒழிப்பு, வேத, புராண, சாஸ்திர, இதிகாச எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு, கடவுள் மறுப்பு உள்ளிட்ட அனைத்து முற்போக்கு அம்சங்களின் விளைநிலமாகத் திராவிடர் கழகம் திகழ்கிறது.

தி.க விலிருந்து முரண்பட்டு திமுக, அதிமுக வும் இன்ன பிற திராவிடக் கட்சிகளும் ஒன்றன்பின் ஒன்றாக உருவாகி வளர்ந்தன. ஆர்.எஸ்.எஸ் திட்டங்களை செயல்படுத்தும் பாஜக போல் அல்லாமல் திக விடமிருந்து முரண்பட்டு வந்தவையே மேற்கண்ட திராவிடக் கட்சிகள் ஆகும். எனவே தான் ஒரு சில சீர்திருத்தங்களைத் தான் இக்கட்சிகளால் செய்ய முடிந்தது. புரட்சிகரப் பாதையில் செல்ல முடியவில்லை. ஏனெனில் இவை முதலாளித்துவ சீர்திருத்தக் கட்சிகளே ஆகும்.

1925- ஆம் ஆண்டு புரட்சிகரத் தன்மையுடன் தொடங்கப்பட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இந்திய ஒன்றிய காங்கிரஸ் அடக்குமுறைக்குப் பின்னர் நாடாளுமன்றப் பாதையைத் தேர்ந்தெடுத்தது. கருத்து முரண்பாடு காரணமாகப் புரட்சி செய்யப் போகிறோம் என்ற முழக்கத்துடன் சிபிஐ இல் இருந்து பிரிந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) 1964 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் அந்தக் கட்சியும் நாடாளுமன்றத் தேர்தல் பாதையை ஏற்றுக் கொண்டது.

சிபிஎம் மின் பின்னடைவுக்குப் பிறகு கிளர்ந்து எழுந்த இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் 1967- இல் நக்சல்பாரி இயக்கமாகவும் 1972ல் சாரு மசூம்தார் தலைமையில் சிபிஐ எம்.எல் இயக்கமாகவும் உருவெடுத்தன. அவர்கள் புரட்சிகர ஆயுதப் போராட்டப் பாதையைத் தேர்ந்தெடுத்தனர். வினோத் மிஸ்ரா அவர்களின் திரிபுவாதம் கட்சியை உடைத்தது. அதுதான் இப்போது எம்.எல் குழுக்களும் நாடாளுமன்றத் தேர்தல் பாதையைத் தேர்ந்தெடுக்க காரணமாக அமைகிறது. இக்குழுக்களின் இம்மாதிரியான முடிவுகள் புரட்சியைத் தள்ளிப் போடுகின்றன.

தேர்தல் பாதையில் சென்ற இடதுசாரிக் கட்சிகள் குறைந்தபட்சம் தங்கள் தலைமையிலான 'இடதுசாரி ஐக்கிய முன்னணி'யைக் கட்ட முடியாதது ஏன் என்று கேட்கிறோம். திமுக,அதிமுக, தேமுதிக உள்ளிட்ட முதலாளித்துவக் கட்சிகளுடன் மாறிமாறிக் கூட்டணி அமைத்து இறுதியில் ஓரிலக்க எண்ணிலான சட்டமன்ற, நாடாளுமன்ற தொகுதிகளை அவர்களிடம் யாசித்துப் பெறுவது ஏன் என்று கேட்கிறோம். யார் யாரையோ முதல்வர் வேட்பாளர்களாக அறிவித்து அவர்கள் பின்னால் போகும் சிபிஎம்எல் (மக்கள் விடுதலை) போன்ற கட்சிகளும் திமுக, அதிமுக போன்ற கட்சிகளை மாறிமாறி ஆதரிக்கும் சிபிஐ, சிபிஎம் போன்ற கட்சிகளும் மறைந்த ஆளுமைத் தோழர்களான நல்லகண்ணு மற்றும் சங்கரய்யாவை முதல்வர் வேட்பாளர்களாக அறிவிக்க ஏன் துணியவில்லை என்று கேட்கிறோம். எடுத்துக்கொண்ட தேர்தல் பாதையிலாவது சரியாகச் சென்று இருக்கிறீர்களா என்று நட்பு முரண்பாட்டோடு தான் உங்களைக் கேட்கிறோம். காங்கிரஸ் ஆட்சியின் போது இந்திய நாடாளுமன்றத்தில் நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்தீர்களே அதை நீங்கள் மறந்து விட்டீர்களா?

இன்றைய காலகட்டத்தில் சாதி ஒழிப்பு,மதவாத எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு,தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை என்பனவற்றை முன்னிறுத்தும் கட்சிகளை ஆதரிப்பதே எமது நிலைப்பாடாகும். கெடு வாய்ப்பாக மேற்கண்டவற்றை முன்னிறுத்தும் கட்சிகள் தேர்தல் பாதையில் அணிவகுக்க வில்லை இடதுசாரிக் கட்சிகளின் தலைமையில் இந்திய அளவிலான ஒரு ஐக்கிய முன்னணியை யாம் முன்மொழிகிறோம். அதையே தமிழ்நாட்டிலும் விரும்புகிறோம். அப்படிப்பட்ட ஐக்கிய முன்னணி கட்ட இடதுசாரிகள் முயல வேண்டும் என்று பரிந்துரைக்கிறோம். அப்படிக் கட்டப்பட்டால் அதற்கு நாங்கள் ஆதரவைத் தெரிவிப்போம். ஆனால் யாம் தேர்தலில் பங்கேற்பது இல்லை. அந்த வகையில் தேர்தல் புறக்கணிப்பு எமது தற்போதைய நிலைப்பாடாகும்.

# பாசிச பாஜக அதிமுக கூட்டணியும், சீமானின் இந்துத்துவத் தமிழ்த் தேசியமும்

- க. இரா. தமிழரசன்

2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், மதிமுக, விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட கட்சிகளுடன் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியை அமைத்து திமுக போட்டியிடுகிறது. கடந்த தேர்தலில் திமுக கூட்டணியில் இல்லாத தேமுதிக, மக்கள் நீதி மய்யம் ஆகிய கட்சிகளும் தற்போது இணைந்துள்ளன.

அதே போல் அதிமுக கூட்டணியில் பாஜக, அன்புமணி இராமதாஸ் தலைமையிலான பாமக, தமிழ் மாநிலக் காங்கிரஸ், அமமுக உள்ளிட்ட கட்சிகள் இணைந்து தேர்தலைச் சந்திக்கின்றன. 2024 மக்களவைத் தேர்தலில் பாஜக - அதிமுக இரு கட்சிகளும் பிரிந்து இருவேறு கூட்டணிகளாகக் களம் கண்டன. ஆனால் இந்த சட்டமன்றத் தேர்தலில் அதிமுகவும் பாஜகவும் இணைந்து இந்தத் தேர்தலை எதிர்கொள்கின்றன. விஜயைத் தன் பக்கம் கொண்டு வர பல்வேறு நெருக்கடிகளைப் பாஜக கொடுத்துப் பார்த்தது. ஆனாலும் அவரது தமிழக வெற்றிக் கழகம் தனித்துப் போட்டியிடுகின்றது.

விஜய் தன் பக்கம் வருவார் என்ற நம்பிக்கையில் அவரோடு கூட்டணி அமைக்கலாம் என்று காத்திருந்த சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சியும் வேறு வழியில்லாமல் தனித்துப் போட்டியிடுகின்றது. இப்படித் தேர்தல் களம் சூடாகி வருகின்றது.

தமிழ்நாட்டில் நிலவுகிற இப்படியான சூழலில், நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் தமிழ்நாட்டு மக்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தேர்தல் புறக்கணிப்பு செய்த இயக்கங்கள் கூட பாசிசத்தின் அபாயம் கருதி தேர்தலில் வாக்களிப்பது, தாங்கள் தேர்வு செய்யும் கட்சிக்கு பரப்புரை செய்வது என மாற்றத்தை உருவாக்கியிருக்கிறது தமிழ்நாட்டின் சூழல். அனைவருக்கும் இலக்கு ஒன்றுதான் பாசிச பா.ஜ.க அதன் கூட்டணியும் வரக்கூடாது என்பது தான்.

பாசிசக் கொள்கையோடு செயல்படும் இந்துத்துவச் சக்திகளையும் அதனோடு கூட்டணி வைத்துள்ள அதிமுக உள்ளிட்ட கட்சிகளையும், அதே போல் சமூகப் பிளவுகளை உருவாக்கும் சாதிக் கட்சிகளையும் இந்துத்துவத்திற்குச் சேவையாற்றும் போலித் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டு அவற்றை எதிர்க்க வேண்டிய கட்டாயம் இந்தத் தேர்தலில் ஏற்பட்டுள்ளது.

பாஜக முன்னெடுக்கும் இந்துத்துவ அரசியல், மத அடிப்படையில் மக்களைப் பிரிக்கிறது. இந்த அரசியல், சனநாயகத்தின் அடிப்படை மதிப்பீடுகளான சமத்துவம், சகோதரத்துவம், மதச்சார்பின்மை, மொழி- பண்பாட்டுப் பன்மை ஆகியவற்றைச் சிதைக்கிறது.

மேலும், பாசிசத்தின் முக்கிய அம்சமான ஒரே அடையாளத்தை (மொழி, மதம், சட்டம், கல்வி, தேர்தல் உள்ளிட்டவற்றை) திணிப்பது, எதிர்ப்புகளைக் காவல் துறை, நீதிமன்றம், நிர்வாகத்துறை, இராணுவம் ஆகியவற்றைக் கொண்டு ஒடுக்குவது போன்றவை இந்திய அரசியல் சூழலில் தெளிவாகக் காணப்படுகின்றன.

இந்தப் பாசிசத்தன்மையை எதிர்ப்பது சனநாயகத்தை காக்க நினைக்கும் ஒவ்வொருவரின் அடிப்படைக் கடமை. இந்துத்துவ பாசிசத்திற்கு எதிரான கருத்தியல் என்பது தேசிய இனங்களின் விடுதலைக் கருத்தியலே. அந்த வகையில் தமிழ்த் தேசியக் கருத்தியலே இந்துத்துவப் பாசிசக் கருத்தியலுக்கு எதிரானது.

ஆனால், தமிழ்த் தேசியம் என்ற பெயரில் பேசப்படும் சில கருத்துகள், உண்மையான இந்துத்துவ எதிர்ப்பு நோக்கத்தை விட்டு விலகி, மறைமுகமாக இந்துத்துவ அரசியலை வளர்க்கும் அபாயத்தையும் கொண்டிருக்கின்றன. நாம் தமிழர் கட்சி இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது.

தமிழ்த் தேசியம் என்ற கருத்து, வரலாற்றில் சாதி ஒழிப்பு, இந்துத்துவ எதிர்ப்பு, மொழி- பண்பாட்டு உரிமை போன்ற அடிப்படைகளில் வளர்ந்தது. இந்த அடிப்படைகளில் மிக முக்கியமானது பார்ப்பனிய ஆதிக்கத்திற்கு எதிரான நிலைப்பாடு.

ஆனால், ஒருபுறம் பார்ப்பனியத்தை திறனாய்வதாக அல்லது எதிர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு, மறுபுறம் அதனுடன் இணைந்து தமிழ்த் தேசத்தை வெல்வோம்" என்ற கருத்தைச் சீமான் போன்றவர்கள் முன் வைப்பது தமிழ்த் தேசிய அடிப்படைக் கருத்தியலுக்கு எதிரானது.

இந்திய அரசியலில் பாஜக பயன்படுத்தும் உத்தியை தமிழ்நாட்டிலும் பயன்படுத்துகிறது. குறிப்பிட்ட சாதிகளிடையே உள்புகுந்து அவற்றில் செல்வாக்குள்ள கட்சிகளை பாஜக ஒருங்கிணைக்கிறது. வட தமிழகத்தில் வலுவாக உள்ள பாட்டாளி மக்கள் கட்சியையும், தென் தமிழகத்தில் செல்வாக்குள்ள நாடார் மற்றும் முக்குலத்தோர் அமைப்புகள் மற்றும் சங்கங்களுடன் நேரடித் தொடர்புகளைப் பாஜக வலுப்படுத்தி வருகிறது. அதற்காக, டி.டி.வி. தினகரன் உள்ளிட்ட அதிமுகவிலிருந்து பிரிந்த குறிப்பிட்ட சாதி வாக்கு வங்கிகளைக் கொண்ட தலைவர்களையும் தென் தமிழகத்தில் ஒரு குடையின் கீழ்க் கொண்டு வர முயற்சித்தது.

ஏழு உட்பிரிவுகளைச் சேர்ந்தவர்களைத் 'தேவேந்திர குல வேளாளர்' என்ற பொதுப் பெயரில் அழைக்க அரசாணை வெளியிட்டது, இதன் மூலம் தென் தமிழகத்தில் பள்ளர் சமூகத்தினரிடையே உறவை ஏற்படுத்தியது, கட்சி ரீதியாக புதிய தமிழகத்தைத் தன்னோடு இணைத்துக் கொண்டது.

நாடார் சமூகத்தைச் சேர்ந்த தமிழிசை சௌந்தராசன், அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த எல்.முருகன் கொங்கு மண்டலத்தில் செல்வாக்குள்ள கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த அண்ணாமலை, முக்குலத்தைச் சேர்ந்த நயினார் நாகேந்திரன் என ஒவ்வொரு சாதியைச் சார்ந்தவர்களையும் அவர்களின் வாக்குகளைக் கவர்வதற்காக மாநிலத் தலைவராக்கியது.

சாதி அடையாளங்களை "இந்து" அடையாளமாக மாற்றி தன்னோடு இணைப்பது, பாஜகவின் அடிப்படை உத்தி. ஏனெனில், சாதியை ஒழித்தால் இந்து மதம் இல்லாமல் போகிறது. எனவே, சாதியைப் பாதுகாப்பது பாஜகவின் கடமை. ஆனால் தமிழ் தேசியம் சாதியை ஒழிப்பை அடிப்படையாகக் கொண்டது.

ஆனால், நாம் தமிழர் கட்சியோ, சாதி அடையாளங்களைத் தூக்கியெறிவதற்குப் பதிலாக, தமிழ்க்குடிகள் என்று புதிய வடிவில் மீண்டும் சாதியை நிலைநிறுத்தும் முயற்சிகளைச் செய்கிறது.

இன அரசியல் என்ற அடிப்படையில் தமிழர் - தெலுங்கர் என்ற முரண்பாட்டையும் உயர்த்திப் பிடிக்கிறது.

ஒவ்வொரு சாதியையும் "குடி" என்ற பெயரில் தனித்தனியாகக் கொண்டாடுவது உண்மையில் சாதி உணர்வை வலுப்படுத்தச் செய்யுமே தவிர சாதியை ஒழிக்காது. அது சீமானுக்கும் தெரியும்.

சீமானைப் பொருத்தவரை தேர்தல் அரசியலில் ஈடுபடுவதால், குறிப்பிட்ட சாதிச் சங்கங்களின் ஆதரவைப் பெறுவதற்கு இந்த "தமிழ்க்குடி" என்ற சொல் அவருக்குப் பெரும் உதவியாக இருக்கிறது. சௌராஷ்டிர மாநாட்டில் கலந்து கொண்டு அவர்களை ஆதரித்துப் பேசுவது, பாரதியார் விழாவில் கலந்து கொண்டு, பார்ப்பனர்களுக்கு ஆதரவாகப் பேசுவதெல்லாம் அந்த அடிப்படையில்தான்.

திராவிடக் கட்சிகளின் "பார்ப்பன எதிர்ப்பு" அரசியலால் (உண்மையில் அப்படி இல்லை) ஒதுக்கப்பட்டதாக உணரும் பார்ப்பனச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வாக்கைப் பெறுவதற்காகத் தனது கட்சியில் பார்ப்பனர்களை வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளார்.

நாம் தமிழர் கட்சி சார்பாக 6 பார்ப்பன வேட்பாளர்களை அவர் களமிறக்கியுள்ளார். பார்ப்பனர்கள் நிரம்பி வாழும் மயிலாப்பூரில் ஒரு பார்ப்பனரை நிறுத்தித் தானும் சாதி பார்த்துதான் வேட்பாளரை நிறுத்துவேன் என்று காட்டுகிறார். திராவிடக் கட்சி அதன் தொடக்கக் காலத்தில் இருந்தே சாதி பார்த்துத்தான் வேட்பாளர்களை நிறுத்துகிறார்கள், இந்துத்துவத்தோடு சமரசம் செய்து கொள்கிறார்கள். ஆனால், நாம் தமிழர் அப்படி நிறுத்தலாமா?

நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிடும் 41 வயதான வழக்கறிஞர் வி. அனுஷா, தி இந்து இதழுக்கு வழங்கிய நேர்காணலில் "பரந்த தமிழ் சமூகத்திற்குப் பிராமணர்கள் ஆற்றிய பங்களிப்புகளை திரு. சீமான் பாராட்டியதைக் கேட்டு, தான் அந்தக் கட்சியால் ஈர்க்கப்பட்டதாகக் கூறியுள்ளார். மேலும், பிராமணர்களுக்கு தேர்தலில் வாய்ப்பு வழங்குவதை அறிந்து நாம் தமிழர் கட்சியில் இணைந்துள்ளார். பா.ஜ.க வை விட பார்ப்பனர்களுக்கு நாம் தமிழர் உகந்த கட்சியாக மாறியுள்ளது என்பதை நாம் அறியமுடிகிறது.

கொள்கையைத் தாண்டி வெற்றி என்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட திராவிடக் கட்சிகள் சாதிச் சங்கங்களையும் இந்துத்துவப் போக்கு உள்ளவர்களையும் தங்கள் கூட்டணியில் இணைத்துக் கொள்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு மாற்றாக தங்களைக் காட்டிக் கொள்ளும் நாம் தமிழர் கட்சி இந்துத்துவத்தை, சாதியத்தை எதிர்க்க வேண்டுமே தவிர அவர்களுக்கு துணை செய்யும் அரசியலையும் நடைமுறையையும் கொண்டிருக்கக் கூடாது. இதனால் தான் நாம் தமிழர் கட்சியை இந்துத்துவ தமிழ்த் தேசியக் கட்சி என்கிறோம்.

இந்துத்துவத்தை எதிர்ப்பதற்குப் பதிலாக தமிழ் இந்து எனக் கூறி புதிய வடிவில் இந்துத்துவத்திற்குத் தமிழர்களைப் பலிள கொடுக்கும் அரசியலைச் செய்கிறார்கள். நாங்கள் இந்துக்கள் அல்ல, தமிழர்கள் என்று தனித் தமிழ் அறிஞர்கள் தொடங்கி வரலாற்று ஆய்வாளர்கள் வரை தரவுகளோடு கூறிக்கொண்டிருக்கும் போது, தமிழர்களை தமிழ் இந்து என வகைப்படுத்தி தமிழ்த் தேசிய அரசியலில் நஞ்சை விதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பார்ப்பனிய ஆதிக்கத்தை தமிழர்களிடமிருந்து விடுவிப்பது என்பது வெறும் பண்பாடு சார்ந்தது மட்டுமல்ல, அரசியல், பொருளாதாரம், சடங்கு உள்ளிட்ட சமூக நடைமுறைகள் அனைத்திலும் பார்ப்பனியம் செலுத்தி வரும் ஆதிக்கத்திலிருந்து வெளியேற்றுவதாகும்.

பார்ப்பனியம் சாதி, மதம், கடவுள், சாஸ்திரம், புராணங்கள், வாழ்வியல் நடைமுறைகள் சடங்குகள் எனத் தமிழர்களின் வாழ்வியலில் நீக்கமுற நிறைந்துள்ளது. இந்தப் பார்ப்பனியத்தை எதிர்ப்பதற்குப் பதிலாக " பிராமணக் கடப்பாரையை கொண்டு திராவிட கோட்டையைத் தகர்ப்பேன்" என்று பேசுவது பார்ப்பனியத்திற்கும் அதன் மூலம் இந்துத்துவத்திற்கும் சேவகம் செய்வதாகும்.

தேர்தல் பரப்புரையைத் திருத்தணி மலை அடிவாரத்தில் வேலுக்கு சிறப்பு வழிபாடு செய்து, கையில் வேலுடன் மலையேறி முருகனை வழிபட்டு "முருகனை நம்பினோர் அஞ்சுவதற்கு இல்லை", அவரை நம்பி இந்தப் போர்க்களத்துக்கு செல்கிறோம், அதனால் முருகனிடம் சொல்லிவிட்டுச் செல்கிறோம் என்று கூறி தொடங்கினார். ஆனால், முருகனோடு நிற்காமல் அப்படியே நேராக கோட்டூர்புரம் வரசித்தி விநாயகர் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்தார். முருகன் தமிழர் கடவுள் என்று பேசிவிட்டு விநாயகரை வழிபடுவது எதற்காக? இதுதான் பார்ப்பனியத்திற்கு எதிரான நிலைப்பாடா?

ஒரு விடுதலை அரசியல் என்பது, எந்த ஓர் ஆதிக்கத்திற்கும் எதிரானது. அதற்கு பதிலாக குறிப்பிட்ட ஆதிக்கத்தை மாற்றி அந்த இடத்தில் மற்றோர் ஆதிக்கத்தை நிறுவுவதாகவோ அல்லது ஆதிக்கத்திற்குச் சேவகம் செய்வதாகவோ இருக்கக் கூடாது. அது ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை உறுதி செய்யும், சமத்துவமான சமூகத்தை உருவாக்கும் முயற்சியாக இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டின் அரசியல் வரலாறு, சமூக நீதி, சாதி எதிர்ப்பு, மொழி மற்றும் பண்பாட்டு உரிமைகள் ஆகியவற்றின் மீது கட்டப்பட்டதாகும். அந்த வரலாற்றின் அடிப்படை சிந்தனைகள் - தமிழிய, மார்க்சிய, பெரியாரிய, அம்பேத்கரிய சிந்தனைகள் மூலம், மேலும் வலுப்படுத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

எனவே, மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம். பாஜக போன்ற வெளிப்படையான பாசிச அரசியலை மட்டுமன்றி, தமிழ்த் தேசியம் என்ற பெயரில் மறைமுகமாகச் சமூகப் பிளவுகளை உருவாக்கும் போலித் தமிழ்த் தேசியத்தையும் நாம் வளர அனுமதிக்கக் கூடாது.

அதேநேரம், உண்மையான மாற்றம் என்பது ஒரு கட்சியை தோற்கடிப்பதிலோ, ஒருவரை எதிர்ப்பதிலோ மட்டும் இல்லை என்பதை உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

பொதுவுடைமைத் தமிழ்த் தேசத்தைப் படைப்பது என்பது தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆவது அல்ல. பொதுவுடைமைச் சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்ட கோட்பாட்டையும் அதை அடைவதற்கான போராட்டக் களத்தையும் சார்ந்ததாக இருக்க வேண்டும். அதற்காக, பாசிசமும், இந்துத்துவமும் சாதி ஆதிக்கமும், எந்த வடிவிலிருந்தாலும், மக்கள் ஒன்றிணைந்து போராடி நமக்கான தமிழ்த் தேசத்தைப் படைப்பதை இலக்காகக் கொண்டு பயணிக்க வேண்டும்.

---

# தமிழர் - திராவிடர் ஒருவரே ..!

# திராவிடம் இனமல்ல மொழியே - அம்பேத்கர்.

- காஞ்சி அமுதன்

இப்போது தமிழ்நாட்டில் தமிழ்த் தேசிய உணர்ச்சி பற்றிப் படர்ந்து வளர்ந்து வருகிறது. இந்நேரத்தில் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான ஆரியத்தை அதன் அதிகாரத்தை எதிர்த்து ஒன்று திரள வேண்டிய காலத்தில் சிலர், திராவிடம்தான் தமிழருக்கு எதிரானது என்கின்றனர்.

இது உண்மையானதல்ல என்பதைக் கடந்தகால மனிதசமூக வரலாறு நமக்குக் காட்டுகிறது. பல்லாயிரமாண்டு எதிரியான ஆரியம் தனது மொழியான சமற்கிருதத்தைத் திணித்து இந்தியா முழுவதும் வாழ்ந்த நமது மூதாதையரான நாகர்களை ஒழித்து நமது தமிழ் பேசும் நிலங்கள் அனைத்தும் குறுகிப்போகக் காரணமாக அமைந்தனர். இன்றும் அவர்கள் சமசுக்கிருதத்தை அரசியல் அதிகாரம் கொண்டு எஞ்சி இருக்கிற தமிழகத்தையும் சூறையாடப் பார்க்கிறார்கள். இந்நிலையில் முதன்மை எதிரியான ஆரியத்தை விட்டு விட்டு அதிகாரமற்ற, இன்றைய திரிபான திராவிடம்தான் நமக்குப் பகை என்பது எதிரியை விட்டுவிட்டு நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதா ஆகும்.

திராவிடம் என்பது தமிழே - தமிழை இந்தியா முழுவதும் பேசியவர்கள் நாகர்கள். திராவிடம் என்பது இனப் பெயரல்ல மொழியைச் சுட்டும் என்பதை அண்ணல் அம்பேத்கர் தன் ஆய்வின் வழி விளக்குவதைக் கீழேக் காண்போம்.

“இதுவரை நமக்குக் கிடைத்துள்ள சான்றுகள் அனைத்தையும் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, தென் இந்தியாவின் திராவிடர்களும் வட இந்தியாவின் அசுரர்களும் அல்லது நாகர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது. நாம் நினைவில் கொள்ள வேண்டிய மற்றொரு செய்தி, “திராவிடர் “ என்பது ஒரு மூலச்சொல் அல்ல என்பதாகும். “தமிழ்” எனும் சொல்லின் சமற்கிருத வடிவமே இந்தச் சொல், “தமிழ்” என்னும் மூலச்சொல் முதன்முதலில் சமற்கிருதத்தில் இடம்பெற்றபோது தமிதா (பி.ஆர். பண்டர்கர். இந்தியாவின் பண்டைய வரலாறு பற்றிய விரிவுரைகள் (1919 ) பக்கம் 60.) என்று உச்சரிக்கப்பட்டது; பின்னர் தமிடர் ஆகி முடிவில் திராவிடர் என்று உருத்திரிந்தது. திராவிடர் என்னும் சொல் ஒரு மக்களது மொழியின் பெயரே அன்றி, அந்த மக்களது இனத்தைக் குறிக்கவில்லை, நாம் ஞாபகத்திற் கொள்ள வேண்டிய மூன்றாவது செய்தி, தமிழ் அல்லது திராவிடம் என்பது தென் இந்தியாவின் மொழியாக மட்டுமே இருக்கவில்லை,

மாறாக அது ஆரியர்கள் வருவதற்கு முன்னர் இந்தியா முழுவதுமான மொழியாகவும் இருந்தது, காசுமீர் முதல் கன்னியாகுமரிவரை பேசப்பட்டு வந்தது என்பதே ஆகும். (மேலது நூல் பக்கம் 25- 28) உண்மையில், இந்தியாவெங்கிலும் நாகர்களால் பேசப்பட்டுவந்த

மொழியாகவும் திகழ்ந்தது., ஆரியர்களுக்கும் நாகர்களுக்கும் இடையே ஏற்பட்ட தொடர்பையும், அது நாகர்களிடமும் அவர்களது மொழியிடமும் ஏற்படுத்திய தாக்கத்தையும் அடுத்தபடியாக நாம் கவனத்திற் கொள்ளவேண்டும். இதில் விந்தை என்னவென்றால், இந்தத் தொடர்பு வட இந்திய நாகர்களிடம் ஏற்படுத்திய விளைவு தென் இந்திய நாகர்களிடம் தோற்றுவித்த விளைவிலிருந்து பெரிதும் மாறுபட்டிருந்தது என்பதாகும். வட இந்தியாவிலிருந்த நாகர்கள் தங்கள் தாய்மொழியான தமிழைக் கைவிட்டுவிட்டு, அதற்குப்பதில் சமற்கிருதத்தை வரித்துக் கொண்டனர்.

ஆனால், தென் இந்தியாவிலிருந்த நாகர்கள் அவ்வாறு செய்யவில்லை; தமிழையே தங்கள் தாய் மொழியாகத் தொடர்ந்து பேணிகாத்து வந்தனர்; ஆரியர்களின் மொழியான சமற்கிருதத்தை அவர்கள் தங்களுடைய மொழியாக ஆக்கிக்கொள்ளவில்லை. இந்த வேறுபாட்டை மனதிற்கொண்டால் திராவிடர் என்ற பெயர் தென் இந்திய மக்களுக்கு மட்டுமே ஏன் பயன்படுத்தும்படி நேர்ந்தது என்பதைப் புரிந்து கொள்ளலாம். திராவிடர் என்ற சொல்லை வட இந்திய நாகர்களுக்குப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை; ஏனென்றால் திராவிட மொழியைப் பேசுவதை அவர்கள் விட்டுவிட்டனர். ஆனால் தென் இந்தியாவின் நாகர்களைப் பொறுத்தவரையில் திராவிட மொழியைத் தங்கள் தாய்மொழியாகத் தொடர்ந்து ஏற்றுக்கொண்டிருந்ததால் தங்களைத் திராவிடர்கள் என்று கூறிக் கொள்வதற்கு முழுத் தகுதி பெற்றிருந்தனர்; அது மட்டுமின்றி, வட இந்திய நாகர்கள் திராவிட மொழியைப் பயன்படுத்துவதைக் கைவிட்டுவிட்டதன் காரணமாகத் திராவிடமொழி மிக அவசியமாயிற்று. தென் இந்தியர்கள் திராவிடர்கள் என ஏன் அழைக்கப்படலாயினர் என்பதற்கு இது தான் உண்மையான காரணமாகும்.

எனவே, தென் இந்திய மக்களுக்குத் திராவிடர் என்ற சொல் விசேடமாகப் பயன்படுத்தப் பட்டிருப்பதானது நாகர்களும் திராவிடர்களும் ஒரே இனத்தவர்களே என்ற உண்மையை மூடிமறைக்க அனுமதிக்கக்கூடாது. நாகர்கள் என்பது இன அல்லது கலாச்சாரப் பெயர்; திராவிடர் என்பது மொழி அடிப்படையில் அமைந்த அவர்களது பெயர் தாசர்கள் என்பதும் நாகர்கள் என்பதும் ஒன்றுதான், அதேபோன்று நாகர்கள் என்பதும் திராவிடர்கள் என்பதும் ஒன்றுதான். வேறுவிதமாகச் சொன்னால் இந்தியாவின் இனங்களைப் பற்றி கூறுவதனால், இத்துறையில் அதிகபட்சம் இரண்டு இனங்கள்தாம் உள்ளன. ஆரியர்களும் நாகர்களுமே அவர்கள். ஆக, பக்கம் 537- 538 அம்பேத்கர் இன்றும் அன்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் நூல். விடியல் பதிப்பக வெளியீடு.

தமிழ் என்பதே திராவிடமாகத் திரிந்துள்ளது. திராவிடம் என்பது ஒரு இனமல்ல. திராவிடமென்பது மொழியைக் குறிக்கும் ஒரு சொல் என்று ஆய்வாளர்களின் மேற்கோள்களைக் காட்டி அம்பேத்கர் இதை விளக்கி உள்ளார். மேலும் இந்தியா முழுவதும் வாழ்ந்த மக்கள் நாகர்கள் என்பவரே, அவர்கள் பேசிய மொழி தமிழே என்றும் கூறுகிறார். வட இந்தியாவில் வாழ்ந்த நாகர்கள் ஆரியர்களின் சமற்கிருதத்தை ஏற்றுக் கொண்டு தமிழ் மொழியை இழந்தனர். தெற்கே தமிழைக் காப்பாற்றிக் கொண்டனர் என்று ஆய்ந்துரைக்கிறார். எவ்வழிப் பார்ப்பினும் தமிழர்கள் தங்களை இழக்க தங்கள் தாய் மண்ணை இழக்க ஆரியர்களே காரணமாய் இருந்துள்ளனர். இது வரலாற்றின் பெருந்துயரமாக இன்றும் நீடிக்கிறது. திராவிடர் என்ற சொல்லைப் பகையாகக் காட்டி ஆரியரின் வரலாற்று ஆதிக்கத்தை, தமிழின அழிப்பை மறைப்பது தமிழர்களுக்குக் கேடாய் அமையும் என்பதை தமிழர்கள் உணர வேண்டும். அன்றும் இன்றும் என்றும் ஆரியமே தமிழரின் பகை என்பதை அழுத்தமாகச் சொல்வோம். இதைத் தமிழர்கள் காலத்தே உணர்ந்து கடமை ஆற்றுவோம்.

தமிழுக்குப் பகை ஆரியமே என்பதை உணர்வோம். ஆரியம் வென்று தமிழ், தமிழ்நாடு காக்க ஒன்றிணைவோம். இன்றைய திராவிடம் என்ற அரசியல் திரிபை தமிழர்கள் திறானய்வோம் . அதன் வரலாற்றுச் சார்பைஙப புரிந்து கொள்வோம்.

இது பல்லாண்டுக்கால வரலாற்றுப் பெரும் போர். தமிழர்களே, ஆரியத்தை உணர்வீர். விழிப்பு பெறுவீர்! ஒன்றிணைவீர்! “நாம்தமிழர்” என்கிற இன எழுச்சிக்கு ஆரியமே முதன்மைப் பகை என்பதை மடைமாற்ற ஆரியர்களின் கைக்கருவிகளாக சிலர் இன்று நீட்டி முழங்குகின்றனர். தமிழுக்கு, தமிழர்க்கு முதன்மைப் பகை ஆரியம் என்பதைத் தமிழர்களுக்கு எடுத்துச்சொல்வோம்... தமிழத்தேசியராய் வெல்வோம்.

# மொழிப்போர் ஈகியர் வரிசையில் வில்லிவாக்கம் சிவாதிலீபன்..

இந்திய ஒன்றியத்தை எந்தக் கட்சி ஆட்சி செய்தாலும், அனைவருக்கும் ஒரே வகையான மொழிக்கொள்கை தான் உள்ளது.

ஒற்றை இந்தியா, இந்து நாடு, தேசிய இனஉரிமை மறுப்பு, இந்தித் திணிப்பு ஆகிய கொள்கைகளில் காங்கிரசு மற்றும் பாசக இரு கட்சிக்கும் பெரிய வேறுபாடுகள் கிடையாது.

அதிலும் 2014 ஆம் ஆண்டு பாசக ஆட்சி அமைந்த பிறகு, இந்தத் திட்டங்கள் எல்லாம் படிப்படியாக அசுர வேகமெடுக்கத் தொடங்கி உள்ளன. ஒற்றை இந்தியாவின் அடையாளமாக இந்தியை, அனைத்து மாநிலங்களிலும் மூன்றாவது மொழியாகக் கட்டாயம் கற்கவேண்டும் என்கிற திட்டத்தின் அடிப்படையில் புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தியது ஒன்றிய அரசு.

இருமொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்ட தமிழ்நாடு, புதிய கல்விக் கொள்கையை ஏற்க மறுத்தது. அதனால் "அனைவருக்கும் கல்வி" என்ற திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு வழங்கும் கல்வி நிதியைக் கொடுக்க மறுத்து,தமிழ்நாட்டிற்கு ஒதுக்கிய நிதியை வேறு வட மாநிலங்களுக்குத் திருப்பி விட்டனர்.

இந்தியை மற்ற மாநிலங்கள் ஏற்றுக் கொண்ட போதும், தமிழ்நாடு மட்டும் இந்திக்கு எதிரானப் போக்கை மாற்றிக் கொண்டதே இல்லை. அதற்குக் காரணம், இந்திய விடுதலைக்கு முன்பும் பின்பும் தமிழர்கள் நடத்திய மொழிப் போராட்டங்களும், உயிர் ஈகங்களுமே ஆகும்.

அந்த வகையில் 2026 ஆம் ஆண்டு, மார்ச் 11ஆம் நாள், ஒன்றிய அரசின் இந்தித் திணிப்பை, தமிழர்களின் வேலை வாய்ப்புப் பறிப்பைக் கண்டித்து மே 17 இயக்கத்தினர் சென்னை பூங்கா நகர் தொடர்வண்டி நிலையத்தில். இந்தி எழுத்துகளைத் கரிநெய்(தார்) பூசி அழிக்கும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆதிக்க இந்தி ஒழிக! அன்னை தமிழ் வாழ்க! என முழங்கிக் கொண்டே உற்சாகமாக இந்தி எழுத்துக்களை அழித்தனர். தொடர்வண்டிக் காவல்துறையினரின் தடுப்பையும் மீறி தோழர் திருமுருகன் காந்தி போராட்டத்தின் நோக்கம் குறித்து நடைமேடையில் நின்று கொண்டிருந்த மக்களிடம் விழிப்புணர்வுப் பரப்பல் செய்து கொண்டிருந்தார். அந்த வேளையில் யாரும் எதிர்பாராத வகையில், தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க! என முழங்கிக் கொண்டே இயக்கத்தின் தோழர் சிவா திலீபன் அவர்கள் வந்து கொண்டிருந்த புறநகர் தொடர்வண்டி முன் பாய்ந்தார். கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்த இந்த நிகழ்வால் கூடி இருந்த தோழர்கள் அதிர்ச்சி அடைந்தனர். செய்வதறியாது திகைத்தனர். பின்னர் அருகில் உள்ள இராசிவ் காந்தி அரசுப் பொது மருத்துவமனைக்குத் தோழரைத் தூக்கிச் சென்றனர். அனைவருக்கும் பெருங்கவலைத் தொற்றிக்கொள்ள, செய்தி காட்டுத் தீயாகத் தமிழ்நாடெங்கும் பரவியது. இது எல்லா இயக்கத் தோழர்களின் மனத்திலும் ஒரு கொந்தளிப்பை உருவாக்கியது. தோழருக்குத் தலையில் பெரும் காயம் ஏற்பட்டிருந்ததால் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். தோழரைத் தமிழ்நாட்டின் முதல்வர் உட்பட அனைத்துக் கட்சித் தலைவர்களும் பல்வேறு முற்போக்கு இயக்கத் தோழர்களும் தோழரின் இணையர் கீதா அவர்களையும் மே 17 தோழர்களையும் சந்தித்து ஆறுதல் கூறினர். கவலையுடன் வரும் அனைவரிடமும் மிகுந்த நம்பிக்கையுடன் எந்தவிதப் பதட்டமுமின்றி தோழரைப்பற்றியும் அவரின் போராட்டக் குணங்கள் பற்றியும், தெளிவான அரசியல் புரிதலோடு பேசிய தோழர் கீதாவை எவரும் மறக்க இயலாது. தாயைப்போலவே மகள் கோகிலாவும் தமிழ் காக்கும் போராட்டத்தில் தனது தந்தையின் செயலைப் பெருமையாகவே கருதுகிறேன் என்றும் அவர் பற்ற வைத்த நெருப்பு, தமிழ்நாடெங்கும் தமிழர்களின் மனத்தில் எழுச்சிக்கனலை மூட்ட வேண்டும் என்பதே எனது விருப்பம் என்றும் கூறினார்.

அனைவரின் நம்பிக்கையும் பொய்க்கும் வண்ணம் 18- 03- 2026, அறிவன்கிழமை இரவு 9 மணி அளவில் தோழரின் இயங்குதிறன் முழுமையாக நின்று போனது. அடக்க முடியாத மனக்குமுறல்கள், யாரையும் யாரும் ஆற்றுப்படுத்த முடியாத துயரம், தோழர்கள் மருத்துவமனையில் குவியத் தொடங்கினர். தோழர் சிவா திலீபன் மறைந்த செய்தி தமிழ்நாடெங்கும் பரவியது. தோழர்கள் அனைவரின் நெஞ்சத்திலும் இந்தி எதிர்ப்புணர்வை ஏற்றி வைக்க நினைத்த தோழர் சிவா திலீபனின் எண்ணம் ஈடேறி விட்டது.

தோழர் சிவகுமார் என்கிற சிவா திலீபன், சென்னை வில்லிவாக்கத்தைச் சேர்ந்த 56வயது நிரம்பிய நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரின் இணையர் தோழர் கீதா என்கிற இசைமொழி, இரண்டு பெண் பிள்ளைகள் கோமதி மற்றும் கோகிலா ஆவர். ஆரவாரமில்லாத அமைதியான குடும்பம், திராவிடப் பற்றாளராக விளங்கிய சிவாதிலீபன், ஈழத்தில் நடந்த இனஅழிப்பிற்குப் பிறகு திராவிடம் உள்ளடக்கிய தமிழ்த்தேசிய அரசியல் மீது நாட்டங்கொண்ட போது மே 17 இயக்கம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

அவரின் உயிர்ஈகம் கூட ஒருநொடிஉணர்ச்சிப் பெருகில் நடந்தது அல்ல. தாம் பிறந்த தமிழ்நாட்டிற்கும், தமது தாய்மொழித் தமிழுக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என பல நாட்களாகப் பேசி வந்தவர். இந்த இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென முந்தைய நாள் இரவே முடிவு செய்துவிட்டார்.

தோழர் சிவாதிலீபனின் இறுதி ஊர்வலம் மறுநாள் மாலை வீட்டிலிருந்து தொடங்கி மூலக்கொத்தளம் வந்தடைந்தது. வரும் வழிகள் முழுக்க சாலையோரம் மக்கள் கூடி நின்று, இரங்கல் தெரிவித்து முழக்கமிட்டு வீரவணக்கம் செலுத்தினர். ஆயிரக்கணக்கான தோழர்கள் பல்வேறு கட்சி இயக்கங்களில் இருந்து கலந்து கொண்டனர். அனைவரும் விண்ணதிர தமிழ் வாழ்க! இந்தி வீழ்க! என்று முழக்கமிட்டுச் சென்றனர். இறுதி நிகழ்வு மொழிப்போர் ஈகியர் நினைவிடத்தில் நடந்தது. மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன் காந்தி ஒருங்கிணைப்பில் பல்வேறு இயக்கத் தலைவர்களும் இரங்கல் உரை ஆற்றினார். தோழர் சிவா திலீபன் இணையர் கீதாவும் மகள் கோகிலாவும் ஆற்றிய வீரவணக்க உரை அனைவரின் மனத்தையும் ஈட்டியாய்த் துளைத்தது. தமிழ்ச் சமூகத்தைப் போராட்டக் களத்திற்கு அழைப்பு விடுத்து, தங்களின் கண்ணீர் வணக்கத்தைத் தெரிவித்தனர்.

இந்தியை எதிர்த்துத் தாய்மொழி காக்கும் போராட்டத்தில் உயிர் நீத்த மொழிப்போர் ஈகியர்கள் நடராசன், தாலமுத்து, கீழப்பழுவூர் சின்னசாமி, விருகம்பாக்கம் அரங்கநாதன், கீரனூர் முத்து, சிவகங்கை இராசேந்திரன், சத்தியமங்கலம் முத்து, அய்யம்பாளையம் வீரப்பன், விராலிமலை சண்முகம், பீளமேடு தண்டபாணி, மயிலாடுதுறை சாரங்கபாணி மற்றும் எண்ணற்ற ஈகியர் வரிசையில் வில்லிவாக்கம் சிவாதிலீபனும் இணைந்து விட்டார்.

ஒன்றிய அரசின் ஆதிக்க அதிகாரத் திமிரை, இந்தித் திணிப்பிற்கு எதிரான போரைத் தோழர் விட்டுச் சென்ற இடத்திலிருந்து தொடர்வதே, அவரின் ஈகத்திற்கு செய்யும் மரியாதை ஆகும்.

இந்தி ஆதிக்கத்தை வெட்டிப் புதைப்போம்!

அன்னைத் தமிழை அதிகாரத்தில் ஏற்றுவோம்!

**- தமிழ்முகம்**

தோழர் சிவா திலீபன் காயமுற்று சிகிச்சையில் இருந்த போதும், முடிவெய்திய போதும் **தோழர் கீதா** சூழலை மிகவும் மன உறுதியுடனே எதிர்கொண்டார்.

அவரின் கவிதை வரிகள்! இதோ..

*அன்று பூத்த மலரல்லவோ*
*உன் முகம்*
*செந்தளிர் மேனி இன்னும் ஆண்டுகள் வாழுமே!*
*எப்போதும் தமிழைப் போற்றும்*
*உன் உளம் நானறிவேனே!*
*இன்முகத்துடன் போராடி உருக்குலைந்த உயிரே!*
*அன்றே நின்றதடா என் இதயம்*
*இன்று என்னுள் துடிப்பது*
*உன் இதயமே!*
*அவசரப்பட்டாயோ என்றனரே*
*நீயோ இன்றில்லை என்றால் என்று என்பாயே!*
*நாம் அதிகம் பேசியது இயக்கத்தைப் பற்றித் தானே!*
*அன்றாட அரசியலை விரல்நுனியில் வைத்த ஆசானே!*
*என் வாழ்வில் வந்த வசந்தமே*
*உன் நினைவை சுமந்து வாழ்வேனே!*
*பாயும் புலியாய் பாய்ந்தாயோ*
*பயத்தை எதிரிக்குப் பரப்பிடவே!*
*தமிழ் தமிழ் என்று முழங்கினாயே..*
*இனி தமிழுக்காக உலகம் திரளும் காண்!*
*இளைப்பாறு என் இனியவனே*
*இயக்கம் இயங்கும் உயிர்ப்புடனே!*

# தமிழக சட்டமன்றத் தேர்தல்களில் இடதுசாரிக் கட்சிகளின் தேர்தல் அணிச் சேர்க்கைகள் 1967 முதல் 2021 வரை...

1967 சட்டமன்றத் தேர்தலில் சிபிஐ 32 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டு 2 இடங்களில் வென்றது. சிபிஎம் திமுக கூட்டணியில் 22 இடங்களில் போட்டியிட்டு 11 இடங்களில் வெற்றி பெற்றது. இடதுசாரி சட்டமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 13.

1971 சட்டமன்றத் தேர்தலில் சிபிஐ, திமுக கூட்டணியில் 10 இடங்களில் போட்டியிட்டு 8 இடங்களில் வென்றது. சிபிஎம் தனித்து 37 இடங்களில் போட்டியிட்டு ஓர் இடத்தில்கூட வெற்றி பெற வில்லை. இடதுசாரி சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 8.

1977 சட்டமன்றத் தேர்தலில் சிபிஐ, காங்கிரஸ் கூட்டணியில் 32 இடங்களில் போட்டியிட்டு 5 இடங்களில் வென்றது. அதே நேரத்தில் சிபிஎம், அதிமுக கூட்டணியில் 20 இடங்களில் போட்டியிட்டு 12 இடங்களில் வெற்றி பெற்றது. மொத்தமாக இடதுசாரி சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 17.

1980 சட்டமன்றத் தேர்தலில் சிபிஐ, சிபிஎம் இரண்டு கட்சிகளும் அதிமுக கூட்டணியில் இணைந்து போட்டியிட்டன. சிபிஐ 15 இடங்களில் போட்டி போட்டு 9 இடங்களில் வென்றது. சிபிஎம் 16 இடங்களில் போட்டியிட்டு 11 இடங்களை வென்றது. இந்த முறை மொத்தம் 20 சட்டமன்ற உறுப்பினர்கள் இடதுசாரி கட்சிகளிலிருந்து பங்கு பெற்றிருந்தனர்.

1984 சட்டமன்றத் தேர்தலில் சிபிஐ, சிபிஎம் திமுக கூட்டணியில் இணைந்து போட்டியிட்டன. சிபிஐ 17 இடங்களில் போட்டியிட்டு 2 இடங்களில் வென்றது. சிபிஎம் 16 இடங்களில் போட்டியிட்டு 5 இடங்களில் வெற்றி பெற்றது. மொத்தம் 7 சட்டமன்ற உறுப்பினர்களோடு இடதுசாரிகள் இருந்தனர்.

1989 சட்டமன்றத் தேர்தலில் சிபிஐ, அதிமுக செயலலிதா அணியில் 13 இடங்களில் போட்டியிட்டு 3 இடங்களில் வெற்றி பெற்றது. சிபிஎம் திமுக கூட்டணியில் 21 இடங்களைப் பெற்று 15 இடங்களில் வெற்றி பெற்றது. இடதுசாரி சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மொத்தம் 18.

1991 சட்டமன்றத் தேர்தலில் சிபிஐ, சிபிஎம் இரண்டும் திமுக கூட்டணியில் போட்டியிட்டன. சிபிஐ 10 இடங்களிலும், சிபிஎம் 22 இடங்களிலும் போட்டியிட்டு தலா 1 தொகுதியில் மட்டுமே வெற்றி பெற்றன. மொத்தம் வெறும் 2 உறுப்பினர்கள் மட்டுமே வெற்றி பெற்றனர்.

1996 சிபிஐ, திமுக கூட்டணியில் இணைந்து 13 இடங்களில் போட்டியிட்டு 8 இடத்தில் வென்றது. சிபிஎம் மதிமுக உடன் இணைந்து 40 இடங்களில் போட்டியிட்டு 1 இடத்தில் வென்றது. இடதுசாரி உறுப்பினர்களின் எண்ணிக்கை மொத்தம் 9.

2001 சட்டமன்றத் தேர்தலில் சிபிஐ, சிபிஎம் இரண்டு கட்சிகளும் அதிமுக கூட்டணியில் இணைந்து போட்டியிட்டன. சிபிஐ 8 இடங்களில் போட்டியிட்டு 5 இடங்களில் வெற்றி பெற்றது. சிபிஎம் கட்சி 8 இடங்களில் போட்டியிட்டு 6 இடங்களில் வெற்றி பெற்றது. இடதுசாரி கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 11.

2006 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் சிபிஐ, சிபிஎம் இரண்டு கட்சிகளும் திமுக கூட்டணியில் இணைந்து போட்டியிட்டன. சிபிஐ 10 இடங்களில் போட்டியிட்டு 6 இடங்களில் வெற்றி பெற்றது. அதேபோல் சிபிஎம் 13 இடங்களில் போட்டியிட்டு 9 இடங்களில் வெற்றி பெற்றது. மொத்தம் 15 இடதுசாரி சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

2011 தேர்தலில் சிபிஐ, சிபிஎம் இரண்டு கட்சிகளும் அதிமுக கூட்டணியில் இணைந்து போட்டியிட்டன. சிபிஐ 10 தொகுதியில் போட்டியிட்டு 9 தொகுதிகளில் வெற்றி பெற்றது. சிபிஎம் 12 தொகுதிகளில் போட்டியிட்டு 10 தொகுதிகளில் வென்றது. இடதுசாரி கட்சிகளின் மொத்த சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 19.

2016 சட்டமன்றத் தேர்தலில் மக்கள் நலக் கூட்டணி அமைக்கப்பட்டு அந்தக் கூட்டணியில் சிபிஐ 25 இடங்களிலும் சிபிஎம் 25 இடங்களிலும் போட்டியிட்டு ஓர் இடத்தில்கூட வெற்றி பெற முடியவில்லை. கம்யூனிஸ்டுகளே இல்லாத சட்டமன்றமாக இருந்தது.

2021 சட்டமன்றத் தேர்தலில் சிபிஐ, சிபிஎம் இரண்டு அணிகளும் திமுக கூட்டணியில் போட்டியிட்டன. சிபிஐ 6 இடங்களில் போட்டியிட்டு 2 இடங்களில் வெற்றி பெற்றது. சிபிஎம் 6 இடங்களில் போட்டியிட்டு 2 இடங்களில் வெற்றி பெற்றது. மொத்தம் 4 சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும்தாம் இடதுசாரி கட்சிகள் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்த 13 தேர்தல்களிலும் சிபிஐ அதிகமாக வெற்றி பெற்ற தொகுதிகளின் எண்ணிக்கை 9 மட்டுமே. அதிகமாகப் போட்டியிட்ட தொகுதிகள் 32. அதேபோல் சிபிஎம் அதிகமாகப் போட்டியிட்ட தொகுதிகள் 40. அதிக எண்ணிக்கையில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் 15 பேர் மட்டுமே.

சிபிஐ, திமுக கூட்டணியில் இடம்பெற்று 1984 சட்டமன்றத் தேர்தலில் 17 இடங்களில் போட்டியிட்டது. திமுக கூட்டணியில் சிபிஐ பெற்ற அதிக எண்ணிக்கையிலான இடங்கள் பெற்றது இந்தத் தேர்தலில் தான். அதிமுக கூட்டணியில் இணைந்து அதிகபட்சமாக 10 இடங்களில் மட்டுமே போட்டியிட்டிருக்கிறது.

சிபிஎம், திமுக கூட்டணியில் இணைந்து போட்டியிட்ட அதிகபட்ச தொகுதிகள் 22. திமுக கூட்டணியில் அதிகபட்சமாக வெற்றி பெற்ற இடங்கள் 15. அதேபோல் அதிமுக கூட்டணியில் இணைந்து அதிகபட்ச இடங்களில் போட்டியிட்டது 20 இடங்களில், 1977 தேர்தலில். அதிமுக கூட்டணியில் வெற்றி பெற்ற அதிகபட்ச இடங்கள் 12.

1967 தொடங்கி 2021 வரை ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக பங்குபெற்ற தேர்தல்களில், சிபிஐ அதிகபட்சமாக, 1989, 2011 சட்டமன்றத் தேர்தலில் 9 சட்டமன்ற உறுப்பினர்களைப் பெற்றது. அதேபோல் சிபிஎம் அதிகபட்சமாக 1989ல் நடந்த தேர்தலில் 15 உறுப்பினர்களை பெற்றிருந்தது.

அதேபோல் இடதுசாரி கட்சிகள் இரண்டும் இணைந்து அதிக அளவில் பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 20 மட்டுமே. 1980இல் அதிமுக கூட்டணியில் இருந்த போது அதிகபட்சமாக 20 உறுப்பினர்கள் இருந்தனர்.

234 தொகுதிகளில் அதிகபட்சமாக 20 தொகுதிகளைக் கூட இன்னும் இடதுசாரிகள் தாண்ட முடியவில்லை. அதுவும் கூட்டணி கட்சிகளின் பலத்தோடு. தனியாகப் போட்டியிட்டபோது எத்தனை விழுக்காடு வாக்குகள் பெற்றனர் என்பதை நாம் அறிவோம்.

இடதுசாரிகளின் வீழ்ச்சி என்பது மக்களின் வீழ்ச்சி. தேசத்தின் வீழ்ச்சி. இந்த வீழ்ச்சியிலிருந்து எப்படி மீள்வது? மக்களிடையே வலிமையாக அமைப்பைக் கட்டுவதும், போராட்ட அரசியலை முன்னெடுப்பதும்தான் இடதுசாரிகளைப் பலப்படுத்தும்.

**மருது பாண்டியன்**, சோசலிச நடுவம்

## ஈரான் மீது கை வைக்காதே!

*பின்தங்கிய நாடான ஈரானில்*
*நடக்கும் ஆட்சி முற்போக்கென்று*
*நாம் முலாம் பூசவில்லை..*
*ஆட்சி மாற்றம் வேண்டுமெனில்*
*அந்த மக்கள் பார்த்துக்கொள்வர் !*
*அமெரிக்க ஏகாதிபத்தியமும்*
*இசுரேலின் சியோனிசமும்*
*வானூர்தியில் குண்டுகளை வீசி*
*பள்ளிக் குழந்தைகளையும்*
*மதகுருமாரையும்*
*இராணுவத் தலைவர்களையும்*
*அறிவியலாளரையும்*
*எப்படிக் கொல்லலாம் ?*
*ஆட்சி மாற்றத்திற்காம்..*
*அடுக்குகிறார் பொய்களை !*
*செனிவாவில் பேச்சுவார்த்தை*
*நடைபெறும்போதே*
*டெகரானில் குண்டு வீசியதேன்?*
*ஈராக்கில் பொய்யான 'பேரழிவு ஆயுதம்போல்'*
*ஈரானில் பொய்யான 'அணு ஆயுதமா?*
*முந்தைய லிபியா, ஈராக், சிரியா*
*அமெரிக்க அடாவடித்தனத்தின் பின்னர்*
*முன்னேறியா இருக்கிறது ?*
*'தட்டிக் கேட்க ஆளில்லை என்றால்*
*தம்பி சண்டப் பிரசண்டன் போல்'*
*மூலைக்கு மூலை*
*ஊளையிடும் ஆயுதக் குழுக்கள் !*
*ஆப்கனில்*
*முந்தைய வியட்னாம் போலே*
*மீண்டும் அடிவாங்கியது அமெரிக்கா !*
*இதுவரை ஆட்சி மாற்றம்*
*என்னதான் கிழித்தது ?*
*உண்மைத் தேவை*
*இசுரேலிலும் அமெரிக்காவிலும்*
*வரவேண்டும் ஆட்சி மாற்றம் !*
*அதுதான் வாசிங்டன் டெல்அவிவ் வீதிகளில்*
*உழைக்கும் மக்களின் முழக்கம் !*
*உலக மக்களின் முழக்கமும் கூட !*
*இனவாத இலங்கை அரசுக்கு*
*முன்பு ஈரான் அரசு உதவியதால்*
*'இப்போது அடி' என்று*
*ஏகாதிபத்தியத்துக்கும் சியோனிசத்திற்கும்*
*சிலர் அழைப்பு விடுவதும்*
*அமெரிக்கா இசுரேல் செய்த*
*இரண்டகத்தை வசதியாய் மறப்பதும்*
*அகநிலைவாத அணுகுமுறையே !*
*கொள்கை சார்ந்தநிலைப்பாடு அல்ல!*
*தமிழ்த் தேசியம் என்றாலும்*
*பாட்டாளி வர்க்க சர்வதேசியப்*
*பார்வையைக் கொள்ளட்டும் !*

— **ஆற்றல்**

# தூங்க விடாமல் செய்யும் படைப்பு

**கண. குறிஞ்சி**
புதுமலர் ஆசிரியர்

பிரளயன் நெறியாள்கையில் ஈரோட்டில் அரங்கேற்றப்பட்ட "வனப்பேச்சி என்கிற பேரண்டச்சி" எனும் காவியத்தை மேடையில் நாடகமாகக் காண முடிந்தது. ஈரோடு ஆட்சியரும், கவிஞருமாகிய திரு.கந்தசாமி அவர்கள் தலைமையில் நடந்தேறிய இந்த நாடகத்தைக் கண்ட பார்வையாளர்கள் அறிவார்ந்த உணர்வில் கரைந்திருந்தனர். சூழலியல் கருவைக் கொண்டு நெய்யப்பட்ட செய்நேர்த்தி மிக்க பிரளயனின் 95 நிமிட நேரப் படைப்பைக் கொண்டாடாமல் இருக்க முடியாது.

தவிரவும், மிகவும் காத்திரமான இரண்டு அரசியல் செய்திகள் இந்த நாடகத்தில் உள்ளுறையாகப் பதிந்து கிடக்கிறது. இந்திய மக்களுக்கு முன்னால் இரண்டு எதிரிகள் உள்ளனர் என சோசலிசத் தலைவர் இராம்மனோகர் லோகியாவிலிருந்து அண்ணல் அம்பேத்கர் வரை தொடர்ந்து பலரும் நமக்குச் சுட்டிக்காட்டி உள்ளனர். **"நமது மூளையைப் பார்ப்பனர்கள் ஆள்கின்றனர். நமது வயிறை பனியாக்கள் ஆள்கின்றனர்"** என்றார் லோகியா. இதைப் பட்டவர்த்தனமாக அம்பலப்படுத்தினார் அண்ணல் அம்பேத்கர். "**முதலாளித்துவமும், பார்ப்பனியமும்தான் இந்திய மக்களின் முதன்மையான எதிரிகள்**" என்பது அண்ணலின் பிரகடனம். இந்த இருபெரும் ஆபத்துக்களையும் தனது அடர்த்தியான வசனத்திலும், செறிவான உள்ளடக்கத்திலும் புதைத்து வைத்துள்ளார் தோழர் பிரளயன். கூடவே சமகாலத்தில் பேருருவம் (விசுவரூபம்) எடுத்து நிற்கும் சூழலியல் சிக்கலையும் இணைத்திருப்பதில்தான் பிரளயனின் தனித்துவம் மிளிர்கிறது.

அண்மைக் காலத்தில் சூழலியல் சிக்கல் பெரும் சவாலாக மாறியது ஏன் என்ற கேள்வியையும் நாம் கேட்க வேண்டியுள்ளது. இது குறித்த எனது புரிதலைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். கடந்த நூற்றாண்டுகளில் முதலாளித்துவத்தில் மூவகைப் போக்குகள் இருந்ததைப் பாவிக்க முடிகிறது. தங்களது பாரம்பரியச் சொத்தை வைத்துக் கொண்டு, தங்களது மூலதனத்தைப் பெருக்கிக் கொண்ட முதலாளிகள் ஒருவகை. இதற்கு டாட்டா / பிர்லா போன்றோரை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். கல்வி / அறிவியல் தொழில்நுட்பத்தை வைத்துத் தங்களது மூலதனத்தைப் பெருக்கிக் கொண்ட முதலாளிகள் அடுத்த நிலை. நாராயண மூர்த்தி, சிவ் நாடார், பில் கேட்ஸ் உள்ளிட்டோரை இந்த வகையினத்தில் அடையாளப் படுத்தலாம். மூன்றாவதாக, இயற்கையைச் சூறையாடி உலகப் பணக்காரராக ஆனவர்கள் . அதற்கு எடுத்துக்காட்டு அம்பானி, அதானி, வேதாந்தா போன்றோர்.

முதலிரண்டு வகைகளிலும் மனித உழைப்பைச் சுரண்டித்தான் மூலதனம் குவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இயற்கைக் கனிவளங்ளைச் சுரண்டுவதில் ஒப்பீட்டளவில் அந்த அளவு நச்சரிப்பும் தொல்லையும் இல்லை என்பதைக் கார்ப்பரேட்டுகள் உணர்ந்தனர். ஊதிய உயர்வு, போனஸ், பணி நிரந்தரம் போன்ற "எரிச்சல்" ஊட்டும் தடைகள் இதில் இல்லை என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். எனவே இயற்கைக் கனிமவளங்களை அதிகாரத்தை வைத்துக் கொண்டு எவ்வளவு வேண்டுமானாலும் தடையின்றிச் சுரண்டலாம் என்பது அவர்களது கணக்கு. ஆனால் இதில் உள்ள சிக்கல் என்னவென்றால், மக்களை விழிப்படையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் முதலாளிகளுக்கு முக்கியம். இந்த இடத்தில்தான் பிரளயன் போன்றோரது தேவையை நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

முதலாளியம் (கார்ப்பரேட்) / பார்ப்பனியம் / சூழல்நாசம் ஆகிய முப்பெரும் பகைசக்திகளை அழித்தொழிக்க வேண்டியதன் தேவையைத் தனது படைப்பு நேர்த்தியால் பார்வையாளர்களிடம் நன்கு கடத்தி விடுகிறார் பிரளயன்.

தாடகையும் விசுவாமித்திரனும் பேசும் உரையாடல் இந்தக் கோட்பாட்டுப் பின்னணியை எளிதில் தெளிவாக்கி விடுகிறது. பார்ப்பனர்கள் ஆயுதம் தூக்க மாட்டார்கள். ஆனால், பிறரைக் கொண்டு தங்களது காரியத்தைத் தந்திரமாகச் சாதித்துக் கொள்வார்கள் என்பதை மிக அருமையாக வெளிப்படுத்தும் அரிய காட்சி அது. அதே போல் தாடகை, ராட்சசி போன்ற சொற்களுக்குப் பின்னால் இருக்கும் சாதி அரசியலையும் நாடக ஆசிரியர் தோலுரித்துக் காட்டுகிறார். "ஒவ்வொரு சொல்லுக்குப் பின்னாலும் ஓர் அரசியல் உள்ளது" எனத் தோழர் மாவோ குறிப்பிட்டதை நாம் மறக்கலாகாது.

தாடகையை இயற்கை அன்னையின் குறியீடாகக் கொண்டால், அவர் மீது ஏவப்படும் அம்புகள் என்பவை, இரும்புச்சுரங்கங்கள், தேயிலைத் தோட்டங்கள், மீதேன்/ஆற்றுமணல் கொள்ளை போன்றவற்றைக் குறிக்கிறது என்பதைப் பிரளயனின் உரையாடல் உடனடியாகப் புரிய வைக்கிறது. "இயற்கையை வெல்ல மனிதன் முயன்றால், இயற்கை அவனுக்குக் கடுமையான பாடங்களைக் கற்றுத்தரும் " என்றார் ஏங்கெல்ஸ். ஆனால், தான் பால் குடித்த தாயின் மார்பகத்தைக்கூட அறுக்கத் தயங்காத மனச்சாட்சியற்ற மனிதர்களைக் கொண்டதாக இருக்கிறது இந்த உலகம். உலகின் ஓர் இருண்ட பக்கம் இது.

ஆனால் ஒளி மிக்க இன்னொரு பக்கமும் இருக்கிறது. தனது தாயகத்தின் இயற்கை வளத்தைக் காப்பதற்காக கென் சாரோ விவா (நைஜீரியா) சன் ரதா (கம்போடியா) போன்ற எண்ணற்ற புரட்சியாளர்கள் தங்கள் உயிரைக் காணிக்கையாகத் தந்தார்கள் என்பதுதான் நம்பிக்கை ஊட்டும் அந்த மறுபக்கம். வனத்தின் இயற்கை வளத்தைக் காக்கத் தமிழரான பாதிரியார் ஸ்டேன்சாமி ஊபா சட்டத்தில் கைது செய்யப்பட்டுச் சிறையிலேயே உயிர் நீத்தார். இருப்பினும் , "பறவையைக் கூண்டில் அடைத்தாலும், அது பாடுவதை நிறுத்தாது " எனப் பிரகடனப் படுத்தினார். இத்தனை ஒப்பீடுகளையும் "வனப்பேச்சி" நாடகம் நம் உள்ளத்தில் கிளர்ந்தெழச் செய்கிறது.

ஒரு நாடகம் என்பது இலக்கியம் போன்றதல்ல! அதற்குத் தனிமனிதனின் உழைப்பு மட்டும் போதாது. அது ஒரு கூட்டு முயற்சி. நாடக ஆசிரியனின் ஆன்மாவைக் காட்சிப்படுத்தும் சக நடிகர்களின் ஒத்துழைப்புதான் அதன் வெற்றிக்குக் காரணமாக இருக்கும். அழகான மலருக்கு இனிய மணத்தைத் தருவது போல் , வனப்பேச்சியாக வரும் திரைக்கலைஞர் ரோகிணி அவர்களின் நடிப்பு இந்நாடகத்தின் அடர்த்தியைக் கூட்டி நம்மைப் பிரமிக்க வைக்கிறது. அவரது திரை அனுபவமும், முற்போக்குக் கோட்பாட்டின்பாலான அவரது ஆத்மார்த்தமான ஈர்ப்பும் இந்த நாடகத்தின் சிகரம் என்றால் அது மிகை ஆகாது. கூடவே கவின்மலர் மற்றும் விசுவாமித்திரர் உட்பட பல்வேறு பாத்திரங்களில் நடித்த பலரது நடிப்பும் உயிரோட்டமாக அமைந்துள்ளது.

பழமையையும் புதுமையையும் இணைக்கும் பாலமாகத் திகழ்பவர் பிரளயன். இக்கலவை இந்த நாடகத்திற்குக் கூடுதல் ஈர்ப்பைத் தருகிறது. இந்நாடகத்தின் இசையும் நடனமும் அதற்கோர் எடுத்துக் காட்டு. தனது இருப்பைச் செயற்கையாகத் திணிக்காமல், இறுதிவரை நம்மோடு இயல்பாகப் பயணிக்கும் பின்னணி இசையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

உள்ளத்தில் கிளர்ச்சி ஊட்டிச் செயலுக்குத்தூண்டாத ஒன்று

சிறந்த படைப்பாக இருக்க முடியுமா? , 'சௌந்தரிய உபாசகர்கள் "

வேண்டுமானால், இதை ஒப்புக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் மக்களுக்காகச் சிந்திப்பவர்கள் அப்படி வாளாவிருக்க முடியாது. . ஒரு படைப்புக்குள் நுழையும் போது உள்ள மனிதன், நுழைந்த பின் அதிலிருந்து வெளியேறும் போது மேம்பட்ட வேறோர் புதிய மனிதனாக வரவேண்டும். ஜெல்லி, வால்ட் விட்மன், பாப்லா நெரூடா, பாரதிதாசன், பட்டுக்கோட்டை, இன்குலாப் போன்ற படைப்பாளிகள் இந்த இரசவாதத்தைத்தான் செய்தார்கள். அப்படிப்பட்ட உருமாற்றத்தைப் பிரளயன் இதில் உருவாக்கி உள்ளார்.

நாடக அரங்கை விட்டு வெளியேறும் போது, தொல்லைக்குள்ளாக்கும் கேள்வி ஒன்று நம்மைத் துரத்திக் கொண்டே வரும். இத்தகைய நாசகார சக்திகளை ஒழித்துக் கட்ட நாம் என்ன செய்ய,வேண்டும் எனும் அந்தக் கேள்வி மிகவும் பொருள் மிக்கது. அந்தக் கேள்வி அவர்களை நிச்சயம் செயலுக்குத் தூண்டும். அநீதியைக் கண்டு அமைதியாகக் கடந்து செல்லும் பார்வையாளனாக நாம் இருக்கக் கூடாது என்ற உணர்வை அவர்களிடம் அது தூண்டும். அப்பொழுது பிரளயனின் வெற்றி அங்கே நிலைநாட்டப்படும்.

*கதறித் துடிக்குதம்மா
கண்ணு கலங்குதம்மா
பெத்தவங்க கனவு எல்லாம்
செத்து சிதைஞ்சதம்மா..
எந்தப்பாவி கண்டானோ
இடியாகி நின்றானோ
அறியாமல் சென்றாயோ
அறிந்த இடமென நின்றாயோ..
நாலு பக்கம் நாய்கள் சூழ
நடுவில் சிக்கிய மானாகத்
தவித்துப் போனாயோ*

*தனிமையாய் ஆனாயோ..
எழுதிய தேர்வுதான்
இன்னும் உனக்கு முடியலையே
என்ன நடந்ததுன்னு
சொல்ல ஓர் ஆளில்லையே..
கழிவறை கட்டக் கூட
காசில்லாத ஏழைகிட்ட
ஓட்டுக் கேக்க ஆளு வரும்
ஒருகோடி பொய்யத் தரும்
நம்பிதான் கெடக்கிறோம்
நலிவோடே நடக்கிறோம்*

*வெம்புற வாழ்க்கையில
விடிவுன்னு ஒன்னுமில்ல..
ஏற்றமுன்னு எதுவுமில்ல
ஏழை நம்ம வாழ்க்கையிலே
அழக்கூட தெம்பு இல்ல
ஆதரவு யாரும் இல்ல..
மாறி மாறி ஆண்டாலும்
ஒரு மசுரும்? ஆவதில்ல
ஏழைகளைத் தவிர இப்படி
எந்த உசுரும் சாவதில்ல..!*

**பி.சீ.நல்லரசன்.**

# சட்டமன்றத் தேர்தல் அறிக்கைகள் - 2026 அம்பலப்படும் சில உண்மைகள்!

2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கான அறிவிக்கையை தேர்தல் ஆணையம் மார்ச் 15 அன்று வெளியிட்டது. அதன்படி எதிர்வரும் 2026 ஏப்ரல் 23 அன்று தேர்தல் நடைபெறும் என்றும், மே 4 அன்று வாக்குகள் எண்ணப்பட்டு முடிவு அறிவிக்கப்படும் என்றும் அறிவித்தது. தமிழ்நாட்டில் 234 தொகுதிகளிலும் ஒரே கட்டமாகத் தேர்தல் நடைபெற இருக்கிறது. இதையொட்டி, தமிழ்நாட்டில் முக்கிய அரசியல் கட்சிகள் அனைத்தும் தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. இந்தத் தேர்தல் அறிக்கைகள் கவனமாக மக்களால் பரிசீலிக்கப்பட வேண்டியவை. ஏனென்றால் இந்தத் தேர்தல் அறிக்கைகள் மக்களுடைய வாக்குகளைப் பெறுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. மக்களுடைய எதிர்காலத்தைக் கருதக்கூடிய வாக்குறுதிகளும் இவற்றில் உள்ளன. வாழ்வியல் வசதிகளை அதிகரிக்கக்கூடிய வாக்குறுதிகளும் உள்ளன. இவையன்றி, நிலத்தில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதுபோல, எதிர்கால நாசகார திட்டங்களை ஓரிரு கட்சிகள் தேர்தல் அறிக்கையில் ஒளித்தும் வைத்திருக்கின்றன. இந்தத் தேர்தல் அறிக்கைகளை ஒரு கட்டுரையில் மதிப்பீடு செய்து விட முடியாது என்றாலும், முக்கிய கூறுகளையும் அதன் பின்னால் ஒளிந்திருக்கும் எதிர்காலத் திட்டங்களையும் அடையாளம் காட்ட முடியும்.

### நீண்ட தேர்தல் அறிக்கைகள்:

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மூன்று கட்டமாகத் தேர்தல் வாக்குறுதி அளிக்கைகளை அளித்தது. கடந்த மார்ச் 24 - ஆம் நாள் அதிமுக தலைவரும் எதிர்க்கட்சித் தலைவரும் ஆகிய எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் மக்களை ஈர்க்கக்கூடிய சில வாக்குறுதிகளை அளித்தார். அதிமுக 54 பக்கங்களில் 31 தலைப்பில் 297 வாக்குறுதிகளைத் தேர்தல் அறிக்கையாக அளித்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம் 12 பேர் உள்ள குழுவை அமைத்து, பல்வேறு கருத்துகளைச் சேகரித்து, 98 பக்கங்களில் 50 தலைப்புகளில் நீண்ட தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளது. நாம் தமிழர் கட்சி ' நாம் தமிழர் ஆட்சி செயற்பாட்டு வரைவு' என்ற பெயருடன் 'மாற்றத்திற்கான வழி' என்ற தலைப்பில், 49 உள்ளடக்கத் தலைப்புகளில், 437 பக்கங்களில் தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

திமுக, அதிமுக கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளின் பொதுத்தன்மையாக, மாநில உரிமைகள், மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்கள், பெண்கள் நலம் மாணவர் நலம் நாடும் திட்டங்கள், உரிமைத்தொகைகள் ஆகியவை அமைந்துள்ளன. நாம் தமிழர் கட்சியின் தேர்தல் அறிக்கையில் அத்தகைய திட்டங்கள் ஏதும் இல்லை. ஆனால், மக்களின், குறிப்பாக இளைஞர்களின் கவனத்தைப் பெறும் வகையில் ஈர்ப்பான தலைப்புகளில் நீண்ட செய்திகள் ஆனால் சாத்தியமற்றவை பேசப்பட்டுள்ளன. நாம் தமிழர் கட்சியின் தேர்தல் அறிக்கையில் உள்ள கவனத்தை ஈர்க்கும் சொல்லாடல்களுக்குள் வெறுமை இருக்கிறது. கற்பனையான, நடைமுறை சாத்தியமே அற்ற பல விடயங்கள் பேசப்பட்டுள்ளன. இதற்கு முன்பு மாநில சுயாட்சி பேசிவரும் கட்சிகளின் கோரிக்கைகளையே புதிய தலைப்பிட்டு இந்த தேர்தல் அறிக்கை தருகிறது. தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் முன்வைத்த கருத்துகளின் உள்ளீட்டை ஒழித்துக் கட்டி விட்டு, மேலோட்டை மட்டும் பயன்படுத்தி இருக்கிறது. புதிதாக இத்தேர்தல் அறிக்கையில் பேச முற்பட்டவை நகைப்புக்கு உரியவையாக உள்ளன. கூடுதலாக நாம் தமிழர் கட்சி முன் வைக்கும் கொள்கைகளும் கோட்பாடுகளும் அச்சு அசலாக அவை ஆர்எஸ்எஸ் அறிவாளர்களால் வடிவமைக்கப்பட்டவை என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தி விடுகின்றன.

### (1) திமுக என்ன கூறுகிறது?

### திமுக மாநில உரிமைகள் பற்றிப் பேசுகிறது....

"திராவிட மாடல் 2.0 ஆட்சியில் " ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் குரியன் சோசப் தலைமையிலான குழு பரிந்துரைகளை, நாடு தழுவிய விவாதப் பொருளாக்கி, ஒன்றிய அரசின் எதேச்சாதிகாரப் போக்கைத் தடுத்து நிறுத்தி, மாநில உரிமைகளை நிலைநாட்டிட, உடன்பாடான கருத்துள்ள இயக்கங்களுடன் இணைந்து செயல்பட்டு, அதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் கழகம் மேற்கொள்ளும்.

'ஒரே நாடு ஒரே மொழி' என்ற திட்டத்தை ஒன்றிய அரசு கைவிட வேண்டும். ஆங்கிலமும், தாய்மொழியும் கொண்ட இருமொழிக் கொள்கைக்கு மாற வேண்டும்.

ஆங்கிலம் நிரந்தர ஆட்சிமொழிகளில் ஒன்றாக இருக்க வேண்டும். எட்டாவது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளையும் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும். ஆங்கிலம் மட்டுமே மத்திய - மாநில அரசுகளுக்கு இடையே இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் எனத் திமுக தொடர்ந்து போராடும்.

உயர்நீதிமன்றங்களில் அம்மாநில மொழி, நீதிமன்ற மொழியாகப் பயன்படுத்தப்பட அனுமதிக்க வேண்டும்.

1971 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மட்டுமே நிதிக்குழு பரிந்துரை செய்ய வேண்டும்.

'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்பதைக் கைவிட்டு அதற்கான சட்ட முன்வரைவைத் திரும்பப் பெற வேண்டும்.

கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் நியமனங்களை மாநில அரசே செய்ய வேண்டும்.

மருத்துவம் உள்ளிட்ட உயர்கல்விக்கான தேசிய நுழைவுத் தேர்வுகள் அனைத்தையும் இரத்து செய்ய வலியுறுத்துவோம்.

சரக்கு மற்றும் சேவை வரியின் ஒருபக்க சார்பினைக் குறைத்து கூட்டாட்சி சமநிலையை உருவாக்க வலியுறுத்துவோம்.

சரக்கு மற்றும் சேவை வரி வருவாயில் தற்போது மாநிலங்களுக்கு உள்ள பங்கினை 50 விழுக்காட்டிலிருந்து 70 விழுக்காடாக உயர்த்த வலியுறுத்துவோம்.

மத்திய அரசு 'பாரதிய பாஷா பரிவார்' என்ற அமைப்பின் மூலம் எல்லா இந்திய மொழிகளையும் ஒன்றிணைத்து இவை எல்லாவற்றிற்கும் தாய்மொழி சமற்கிருதம்தான் என நிறுவ முயற்சிக்கின்றது. தமிழ் உள்ளிட்ட திராவிட மொழிகளின் தனித்துவத்தையும், அவற்றின் பண்பாட்டுக் கூறுகளையும் காக்க தி.மு.க தொடர்ந்து பாடுபடும்.

இவற்றோடு மக்கள் நலத் திட்டங்களையும் திமுக தேர்தல் அறிக்கை பேசுகிறது:

இல்லத்தரசிகள் தம் வீட்டில் பயன்படுத்தும் ஃபிரிட்ஜ், வாஷிங் மெஷின், டி.வி., கிரைண்டர், மிக்சி, மைக்ரோவேவ் மற்றும் மின் அடுப்புகள் போன்ற வீட்டு உபயோகப் பொருட்களைப் புதிதாக வாங்கவோ அல்லது ஏற்கனவே பயன்படுத்திவரும் இத்தகைய பொருட்களுக்கு மாற்றாக வாங்கவோ, "இல்லத்தரசி" என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், வருமான வரி செலுத்தாத குடும்பங்களின் இல்லத்தரசிகள் அனைவருக்கும், அவர்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள கடைகளிலேயே மேற்கூறிய வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கிக் கொள்ளும் வகையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 8 ஆயிரம் ரூபாய் கூப்பன் வழங்கப்படும்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை மாதம் 1000 ரூபாயில் இருந்து 2000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

பெண்கள் உயர்கல்வி பெறுவதை ஊக்குவிக்கும் 'புதுமைப்பெண்' திட்டத்தின்கீழ் மாதந்தோறும் மாணவியருக்கு வழங்கப்பட்டு வரும் ரூ. 1000 உதவித்தொகை, ரூ. 1500 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

பள்ளி குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வரும் காலை உணவு திட்டம் ஒன்றாவது முதல் ஐந்தாவது வரை என்பதை மாற்றி இனி எட்டாம் வகுப்பு மாணவர்கள் வரை வழங்கப்படும். முன்னமே 31,000 பள்ளிகளில் படிக்கும் 20 இலட்சம் மாணவ மாணவியர் பயனடைந்தார்கள். இப்போது இந்த எண்ணிக்கை மேலும் கூடும் .

2025- 26 ஆண்டுகளில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரி மாணவர்களுக்குப் புதிய தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது. 35 இலட்சம் மடிக்கணிகள் ஐந்து ஆண்டு காலத்தில் வழங்கப்படும்.

'நான் முதல்வன்' திட்டத்தில் 5 லட்சம் பேர் பயிற்சி பெறுவார்கள். அவர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 1500 உதவித்தொகை வழங்கப்படும்.

2025- ஆம் ஆண்டுக்கான யுபிஎஸ்சி சிவில் சர்வீஸ் தேர்வில், தமிழ்நாடு அரசு, நான் முதல்வன் திட்டத்தின் கீழ்ப் பயிற்சி பெற்றவர்களில் 56 பேர் வெற்றி பெற்றுள்ளனர். தமிழகத்தில் இருந்து தேர்ச்சி பெற்ற மொத்தம் 60 பேரில், இந்த 56 பேர், இந்தத் திட்டத்தின் வழிகாட்டுதல் மற்றும் பயிற்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மகளிருக்கான திருமண உதவித் திட்டம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் பெயரில் உயர் கல்வித் திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கல்லூரிப்படிப்பை முன்னெடுக்கும் பெண்கள் அனைவருக்கும் உதவித்தொகையாக வழங்கப்பட்டு வந்த 1000 ரூபாய், 1500 ஆக புதுமைப்பெண் திட்டத்தில் உயர்த்தப்படுகிறது.

## அதிமுகவின் தேர்தல் அறிக்கை கூறுவது என்ன?

அனைத்து குடும்பங்களும் குறைந்தபட்ச வருமானம் பெறுவதை உறுதி செய்யும் வகையில் பெண்களுடைய உரிமைத் தொகை மாதம் ரூபாய் 1000- இலிருந்து ரூபாய் 2000 ஆக உயர்த்தி வழங்கப்படும். விளிம்பு நிலை குடும்பங்கள் அனைத்தும் குறைந்தபட்சம் மாதம் 20,000 வருவாய் ஈட்டுவதற்கு வாய்ப்புகள் உருவாக்கப்படும். கிராமப்புறங்களில் சிறு குறு விவசாயி சார்ந்த தொழில்கள் பெருகவும், தொழில் வளர்ச்சியை நாடு முழுவதும் பரவலாக்கவும், வேலை வாய்ப்பு உருவாக்கவும் வாக்குறுதி அளிக்கப்படுகிறது. வரிச்சுமை மற்றும் விலைவாசி ஏற்றத்தைச் சமாளிக்க ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் 10,000 சிறப்பு உதவித்தொகை வழங்கப்படும்.

மகளிர் நலம் காக்க 'குலவிளக்கு' திட்டம்: அனைத்து குடும்ப அட்டைதாரருக்கும் ஒவ்வொரு மாதமும் உதவித் தொகையாக ரூபாய் 2000 வழங்கப்படும்.

தற்போது பெண்களுக்குக் கட்டணமில்லா பேருந்து பயணம் அளிக்கப்பட்டி இருக்கிறது. மகளிர் போல ஆண்களுக்கும் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம் அளிக்கப்படும் என்று அதிமுக தேர்தல் அறிக்கையில் கூறி இருக்கிறது.

வீடு இல்லாத குடும்பங்களுக்கு வீடு வழங்கும் 'அம்மா இல்லம் திட்டம்', கிராமப்புறங்களில் வீட்டுமனையும் சொந்த வீடும் இல்லாதவர்களுக்கு அரசே இடம் வாங்கி கான்கிரீட் வீடுகள் கட்டித் தரும் நகரப் பகுதிகளில் 'அம்மா இல்லம் திட்டம்' மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டி விலையில்லாமல் வழங்கப்படும். நூறு நாட்கள் வேலைவாய்ப்பு திட்டம் 150 நாட்களாக உயர்த்தப்படும் (125 நாட்களாக உயர்த்தப்படும் என்று பாஜக ஒன்றிய அரசு அறிவித்தது.

அம்மா இருசக்கர வாகனம் வாங்க மானியம் வழங்கும் திட்டம்: வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு ரூபாய் 25,000 மானியத்துடன் 5 இலட்சம் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கப்படும்.

முதியோர் மற்றும் விதவை, முதிர் கன்னிகள் கணவனால் கைவிடப்பட்டோர், மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியம் ரூபாய் 200 இல் இருந்து ரூபாய் 2000 ஆக உயர்த்தப்படும். வங்கிகளில் பெற்ற கல்விக் கடன் தள்ளுபடி செய்யப்படும். வேலைவாய்ப்பு கிடைக்காமல் கடன் தவனைகளைச் செலுத்த முடியாதவர்கள் துன்பம் தீரும் வகையில் அத்தொகையைச் செலுத்தும் பொறுப்பை அரசே ஏற்கும்.

அரிசி குடும்ப அட்டையை பெற்றுள்ள குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக ஆண்டுக்கு மூன்று எரிவாயு உருளைகள் விலையில்லாமல் வழங்கப்படும். சிறுபான்மை சமயத்தவர்க்குச் சுயதொழில் தொடங்க வட்டி இல்லா கடன் வழங்கப்படும். வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலைக்காகக் காத்திருக்கும் பட்டதாரி இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு மாதம்தோறும் ரூபாய் 2000 வழங்கப்படும். 12 ஆம் வகுப்பு படித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்பவர்களுக்கு மாதம்தோறும் ரூபாய் 1000 வழங்கப்படும்.

மீன்பிடி தடைக்காலங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் ரூபாய் 8000த்தில் இருந்து 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். கைத்தறி நெசவாளர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் விலையில்லா மின்சாரம் 300 யூனிட்டில் இருந்து 450 யூனிட் ஆகும். விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் 1000 யூனிட்டில் இருந்து 1400 யூனிட் ஆக உயர்த்தி வழங்கப்படும்.

ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத்தில் பதிவு செய்து சொந்த ஆட்டோ இல்லாதவர்களுக்குப் புதிய ஆட்டோ வாங்க ரூபாய் 75,000 மானியமாக வழங்கப்படும்.

இல்லத்தரசிகளின் பணிச்சுமையைக் குறைக்க அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்குக் குளிர்பதன பெட்டி விலையில்லாமல் வழங்கப்படும். விலையில்லா அரிசியோடு ஒரு கிலோ பருப்பு, ஒரு லிட்டர் சமையல் எண்ணெய் விலையில்லாமல் வழங்கப்படும்.

## மத்திய - மாநில கூட்டாட்சி முறை பற்றி அதிமுக தேர்தல் அறிக்கை இவ்வாறு பதிவு செய்கிறது:

மாநில அரசுகள் அதற்கான நிதி நிர்வாக உரிமைகளுடன் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். அதற்கு ஏற்ப மாநில அரசுக்கு உரிய நிதி நிர்வாக பகிர்வை மத்திய அரசு வழங்க வேண்டும். இந்திய அரசியலமைப்பு சட்ட வரம்புகளுக்குட்பட்டு மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பொறுப்புகளுடன் மாநில அரசுகள் சுதந்திரமாகச் செயல்பட தேவையான நிதி பகிர்வுகளும் பொறுப்புகளும் மாநில அரசுகளுக்கு முறையாக வழங்கப்பட வேண்டும். நிதி பகிர்வு முறையில் கூடுதல் நிதி மாநிலங்களுக்கு வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்துவோம்.

மிக முக்கிய பிரச்சனை ஒன்றைப் பற்றி அதிமுக தேர்தல் அறிக்கை குறிப்பிடுகிறது. மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை இப்போது மாற்றி அமைக்கப்பட்டால், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 39 இல் இருந்து 31 ஆக குறைந்து விடும் அபாயம் இருக்கிறது. தொகுதிகள் மறு சீரமைப்பில் தமிழ்நாட்டிற்கான தற்போதுள்ள விகிதாச்சார பிரதிநிதித்துவம் குறைந்துவிடாமல் இருக்க தொடர்ந்து வலியுறுத்துவோம் என்று அதிமுக தேர்தல் அறிக்கை கூறுகிறது.

கல்வி, மருத்துவம் போன்ற மனிதவள மேம்பாட்டிற்கு உதவும் முக்கியத்துறைகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பொதுப் பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும்.

இவையன்றி விவசாய மேம்பாட்டிற்காகவும், நீர்வள மேம்பாட்டிற்காகவும், தரிசு நில மேம்பாட்டிற்காகவும், பல திட்டங்களை அதிமுக தேர்தல் அறிக்கை பேசுகிறது.

அரசு பள்ளி மாணவர்களுக்கான மருத்துவ படிப்பு இடஒதுக்கீடு 7.5% இலிருந்து 10% ஆக உயர்த்தி வழங்கப்படும்.

மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையில் உள்ள ஏற்க முடியாதவற்றிலிருந்து தமிழ்நாட்டிற்கு விளக்கு அளிக்க வேண்டும். அறிஞர் அண்ணா கண்ட இரு மொழிக்கொள்கைக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் சரத்துகள் ஏற்புடையதல்ல என்ற இந்த நிலையில் எந்த மாற்றமும் இல்லை.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு உரிய காலத்தில் விலையில்லா மடிக்கணினி வழங்கப்படும்.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை நடத்தி, ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றிட வழிவகை செய்யப்படும். Overseas Man power Development Corporation என்பது நிறுவப்பட்டு இளைஞர்கள் திறன் மேம்பாடு செய்யப்படுவார்கள்.

திமுக, அதிமுக தேர்தல் அறிக்கைகள் கூடுதலான நலத்திட்டங்கள், மகளிர் நலம், மாணவ - மாணவியர் நலம் பற்றி பேசும்போது, நாம் தமிழர் தேர்தல் அறிக்கை இவற்றைப் பேசவில்லை. ஆனால் இவற்றை இலவசங்கள் என்றும், இவற்றைப் பெறுவதே இழிவானது என்றும் நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் தொடர்ந்து பேசி வருகிறார். "அண்டா, குண்டா, மிக்ஸி எல்லாம் நான் தரமாட்டேன் ... அதையெல்லாம் நீங்களே வாங்கிக் கொள்ளும்படி வேலையைத் தருகிறேன். அதற்குச் சம்பளம் தருகிறேன் ... " என்று பேசியிருக்கிறார். உயர் பணிகளில் அமர்ந்து மிகப் பெரும் தொகையைச் சம்பளமாக பெறக்கூடிய வழிவகைகளை உருவாக்கித் தரும் திட்டங்களைத் திராவிடக் கட்சிகள் பேசுகின்றன. பன்றி மேய்க்கவும், கழுதை மேய்க்கவும் இளைஞர்களைச் சீமான் அழைக்கும்போது, அதே இளைஞர்களை ஆட்சிப்பணி அதிகாரிகளாக, தொழில்நுட்ப திறனாளர்களாக உருவாக்கத் திராவிட கட்சிகள் போட்டியிடுகின்றன. சீமான் வகையறாக்கள் இலவசம் என்று பழித்தும் இழித்தும் பேசுகின்ற மடிக்கணினி திட்டம், பல லட்சம் இளைஞர்களைத் தொழில்நுட்ப விற்பனர்களாக மாற்றி இருக்கிறது; இளைஞர்கள் பெரிய தொழில் நிறுவனங்களில் மிகப்பெரிய சம்பளத்தில் வேலை வாய்ப்புகளைப் பெற உதவி வருகின்றன. மாணவர்களைத் தொழில்நுட்பங்களில் ஈடுபடுத்தும் வகையில் 35 இலட்சம் பேருக்கு மடிக்கணினி வழங்குதல் உள்ளிட்டு, பல திட்டங்கள் திமுக தேர்தல் அறிக்கையில் அமைந்துள்ளன.

## இலவசங்கள் என்று இழிவுபடுத்துபவர்களின் நோக்கம் என்ன?

எந்த அரசாக இருந்தாலும் மக்களுடைய வரிப் பணத்தில்தான் அவர்களுக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்தப்படுகிறது. மாணவர்களுக்கும் மகளிருக்கும் செலவு செய்யப்படும் ஒவ்வொரு ரூபாயும் சமூக முதலீடு ஆகும். ஓர் ஏழை வீட்டுப் பெண்ணுக்கு ஒரு மடிக்கணினியை அவருடைய தந்தையால் வாங்கிக் கொடுக்க முடியாது. ஆனால் அதையே அரசாங்கம் செய்யும்போது ஒரு செல்வந்தர் வீட்டுப் பெண்ணுக்குச் சமமான வாய்ப்புகளைப் பெற்று மிக உயர்ந்த நிலையை அம் மாணவி அடைந்து விடுகிறாள். கல்வி கற்கும் போது அதற்கான உபகரணங்கள் செல்வந்தர் வீட்டுச் பிள்ளைகளுக்கு எளிதாக கிடைத்து விடுகிறது. அதே பொருட்களை எளிய குடும்பத்து குழந்தைகளுக்கு அரசே வழங்குகிறது. இதனால் தமிழ்நாட்டில் மிகப்பெரும் கல்வி மேம்பாடு ஏற்பட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. தமிழ்நாடு அரசு வடமாநிலங்களைவிட மேம்பட்டு நிற்பதற்குக் காரணம் கடந்த காலத்தில் மிக அதிக அளவில் கல்விக்கு ஊக்கம் அளித்து வந்திருப்பதுதான். இலவசங்கள் என்று இழிவாகப் பேசக்கூடிய பல திட்டங்கள் மகளிர் மேம்பாட்டிற்கும் கல்வி மேம்பாட்டிற்கும் பேருதவி செய்திருக்கிறது. விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி போன்றவை மக்களுக்கு

வழங்கப்படுவதைச் சீமான் வகையறாக்கள் எள்ளி நகையாடுகிறார்கள். செல்வத்தில் புரளும் குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு, செல்வந்தர்களின் மனைவி மக்களுக்கு கிடைக்கக்கூடிய அந்த வசதிகள் ஏழை எளியோருக்கு கிடைக்கவில்லை என்பது உண்மைதான். ஏழை குடும்பத்தவருக்கும் அந்த வசதிகள் கிடைக்க வேண்டும் என்பது கூட முக்கியமில்லை. ஒரு மிக்ஸி, ஒரு கிரைண்டர் என்பது ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள பெண்ணையும் ஆண்டாண்டு காலமாக அவர்கள் மீது சுமத்தப்பட்டு வந்திருக்கும் கடுமையான உழைப்பில் இருந்து விடுவிக்கிறது. சிறையில் வ.உ. சிதம்பரனார் செக்கிழுத்தார் என்று பேசுகிறோம். அதற்கு ஈடான வேலையை ஒவ்வொரு வீட்டிலும் பெண்கள் பல நூறு ஆண்டுகளாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பொருட்கள் வழங்கிய பிறகு, அனைத்து குடும்பத்திலும் உள்ள பெண்களின் வேலை எளிதாகி இருக்கிறது. அவர்களுக்கு நேரம் மிச்சப்படுகிறது. அந்த நேரத்தை தங்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்குப் பயன்படுத்துகிறார்கள். சிலர் தங்களுக்குக் கிடைத்த இந்தப் பொருட்களை வைத்து சிறு தொழில்கள், சுய தொழில்களைத் தொடங்கி இருக்கிறார்கள். இட்லி சுட்டு விற்பது, இட்லி மாவு தயாரித்து விற்பது என்று தொடங்கி, பல்வேறு சிறு தொழில்களைச் செய்கிறார்கள். இதையும், சுய உதவிக் குழுக்களையும் பயன்படுத்தி, தங்களை வசதி படுத்திக் கொண்ட மகளிரும் உண்டு. மக்கள் வழங்கும் வரிப்பணத்தில் இருந்துதான் இந்தப் பொருள்கள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன. இதை வழங்குவது அரசின் கடமையும் கூட. இவற்றை இலவசங்கள் என்று எள்ளி நகையாடுகிறவர்களுக்குள் ஒரு பண்ணையார்தனம் ஒளிந்து கொண்டிருக்கிறது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூபாய் 1000 வழங்கப்பட்டு வந்தது. இப்போது அது ரூபாய் 2000 என்று திமுக தேர்தல் அறிக்கை அறிவிக்கிறது. 1.31 கோடி பெண்கள் இந்தத் தொகையை பெற்று வந்திருக்கிறார்கள். "ஊதியம் இல்லா வீட்டு வேலை " என்று அலட்சியப்படுத்தப்பட்ட நிலை மாறி பெண்களுக்கு ஒரு பொருளாதார சுதந்திரமும், சுயமரியாதை வாழ்வும் கிடைக்க இத்தொகை பயன்பட்டிருக்கிறது என்பதைக் கிராமப்புற பெண்களின் வாக்குமூலமே உறுதிப்படுத்துகிறது.

"மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வித் திட்டம் " என்பது வித்தியாசமானது. இது "புதுமைப்பெண் திட்டம்" என்றும் பெயரிடப்பட்டிருக்கிறது. திருமண நிதி என்ற பெயரில் பெண்களைப் படிக்க வைக்கும் ஓர் உத்தியை கலைஞர் கருணாநிதி 1989 - இல் கையாண்டார். எட்டாம் வகுப்பு வரை படித்திருந்தால் அப்பெண்ணின் திருமணத்திற்கு ரூபாய் 5000 அளிக்கப்படும் என்றார். 5000 ரூபாய் 1989 இல் பெரிய தொகைதான். பெற்றோர்கள் தங்கள் பெண்களை எட்டாவது வரை படிக்ச வைத்தால் 5000 ரூபாய் கிடைப்பது ஒரு உதவியாக இருக்கும் என்று கருதினார்கள். 2009 - இல் கலைஞர் கருணாநிதி பெண்கள் பத்தாவது வகை படித்திருந்தால் அவர்கள் திருமணத்திற்கு 25,000 ரூபாய் என்று அறிவித்தார். இப்போது பெண்கள் பத்தாவது வரை படித்தார்கள். 2011 - இல் செயலலிதா அம்மையார் காலத்தில் இத்தொகை 50,000 ரூபாயாகவும் 4 கிராம் தங்கமாகவும் மாற்றப்பட்டது. இப்போதும் ஐம்பதாயிரம் ரூபாயும் 8 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது. திருமண உதவி திட்டம் இப்போது மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அரசு பள்ளியில் படித்துப் பட்டப்படிப்பு படிக்க வரும் பெண்களுக்கு மாதம் 1000 ரூபாய் என்று அறிவிக்கப்பட்டு, இத்திட்டம் சிறப்பாக நடைபெற்றது. இப்போது உதவித் தொகை மாதம் ரூ.1500 என்று உயர்த்தி அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இது வியக்கத்தக்க மாற்றங்களை உருவாக்கி இருக்கிறது. கல்லூரியில் சேரக்கூடிய பெண்களின் எண்ணிக்கை 29% அதிகரித்திருக்கிறது.

2022- ல் அறிவிக்கப்பட்ட "நான் முதல்வன் " திட்டத்தில் பயிற்சி பெற்று 2024 தேர்வில் வென்றவர்கள் 50 பேர், இந்த ஆண்டு ஆட்சிப் பணி தேர்வில் தேர்ச்சி பெற்ற 60 பேரில் 56 பேர் 'நான் முதல்வன்' திட்டத்தில் பயிற்சி பெற்றவர்கள். எதிர்காலத்தில் 5 லட்சம் பேர் இப்பயிற்சி பெறுவார்கள் என்றும், மாதம் ஒவ்வொருவருக்கும் உதவி தொகையாக ரூ.1500 வழங்கப்படும் என்றும் திமுக தேர்தல் அறிக்கை கூறுகிறது. 2025 இல் ஆட்சிப் பணித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் 56 பேராக இருந்தாலும், அத்தேர்வுக்காகத் தங்களைத் தயார் செய்து கொண்டவர்கள் பிற உயர் பதவிகளில் அமர்ந்து விடுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இலவசங்கள் என்று இளக்காரமாகப் பேசப்படும் திட்டத்தின் பின்னால் சமூக இழிவு ஒழிப்பும், மிகப்பெரிய சமூக மேம்பாடு நிகழ்வும் ஒளிந்து கொண்டிருக்கின்றன. இது ஒரு சமூக முதலீடு என்பதை மறுக்க முடியாது. இது பற்றி பல ஆய்வு கட்டுரைகள் பாராட்டி எழுதி இருக்கின்றன. தமிழ்நாடு இப்போது leading state in human capital development என்று அடையாளம் காணப்பட்டிருக்கிறது. இத்திட்டங்களின் விளைவாக High literacy rate, மற்றும் skilled workforce உருவாகியுள்ளதாக கட்டுரைகள் குறிப்பிடுகின்றன.
பி .டி.ஆர் பழனிவேல் தியாகராசன் வருங்காலத் தமிழ்நாடு குறித்து இவ்வாறு மதிப்பீடு செய்கிறார்:

"4 trillion economy by 2047 if annual growth rate of 9% is sustained.
"ஓசைப்படாமல் ஒரு புரட்சி நடந்து கொண்டிருக்கிறது" என்று கருதலாம்.

பள்ளிப் பிள்ளைகளுக்குக் காலை உணவிடுவதைக் காணச் சகியாத பார்ப்பன ஊடகங்களும், பார்ப்பன அறிவாளர்களும், பார்ப்பனியத்தின் கைக்கூலிகளும் ஓலம் இடுகிறார்கள். இன்று காலை உணவு பள்ளியில் சாப்பிடும் ஒவ்வொரு குழந்தையும் எதிர்காலத் தமிழகத்தின் மனிதவள முதலீடு என்பதை இவர்கள் உணரவில்லை. தந்தை தன் மகளுக்குக் கல்விக்கான உதவிப் பொருட்களை வழங்குவதற்கும், தமிழ்நாடு அரசு தம் மகள்களுக்கு மடிக்கணினி உள்ளிட்ட பொருட்களை மற்றும் உதவித்தொகையை வழங்குவதற்கும் வேறுபாடு இல்லை.

*மாநில உரிமைகள் குறித்து தேர்தல் அறிக்கைகள் என்ன பேசுகின்றன?*
திமுக தேர்தல் அறிக்கை இவ்வாறு குறிப்பிடுகிறது :

"சுயமரியாதை, சமூக நீதி, சமத்துவம், சகோதரத்துவம், மதச்சார்பின்மை, கூட்டாட்சி கருத்தியல், அதிக அதிகாரங்களைக் கொண்ட மாநிலங்கள், அனைத்து தேசிய இனங்களுக்கும் சம உரிமை" ஆகிய சொல்லாடல்களை முன்வைக்கிறது. "இன்றைய அரசியல் அமைப்பில் ஒன்றிய அரசில் அதிகாரங்கள் குவிந்து கிடக்கிறது. அதைவிட நடைமுறையில் இன்னும் அதிகமான அதிகார அத்துமீறல்கள் தற்போதும் தொடர்கின்றன. எனவே ஒன்றிய அரசின் அதிகாரங்களுக்கும், வரிவிதிப்பு உரிமைகளுக்கும் வரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டும். அதற்கு ஏற்ப இந்திய அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும். நிதிப்பகிர்வில் 50 விழுக்காடு மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டும். வளர்ந்த மாநிலங்களில் இருந்து அதிக வரிகள் வசூலிப்பது போல அந்த மாநிலங்களுக்கு உரிய நிதிப் பகிர்விலும் அதிகமாக இருக்க வேண்டும். ஓய்வு பெற்ற நீதி அரசர் குரியன் சோசப் குழு தனது அறிக்கையின் முதல் தொகுதியை அளித்துள்ளது. ஒன்றிய அரசின் மிதமிஞ்சிய அதிகாரக் குவிப்பையும் மாநில உரிமைகள் அதிவேகமாக பறிக்கப்படுவதையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டி இருக்கிறது. குழுவின் பரிந்துரைகளை நாடு முழுவதும் விவாதப் பொருளாக்கி, ஒன்றிய அரசின் சர்வாதிகாரப் போக்கை தடுத்து நிறுத்தி, மாநில உரிமைகளை நிலைநாட்டிட அனைத்து நடவடிக்கைகளும் திமுக மேற்கொள்ளும் "

என்று தேர்தல் அறிக்கை கூறுகிறது. மாநில சுயாட்சி என்ற தன் நீண்ட காலக் கோரிக்கையைத் திமுக தேர்தல் அறிக்கை மீண்டும் வலியுறுத்தி இருக்கிறது.

அதிமுக தேர்தல் அறிக்கை மத்திய மாநில கூட்டாட்சி முறை பற்றி பேசுகிறது. மாநில அரசுகள் அதற்கான நிதி நிர்வாக உரிமையுடன் சுதந்திரமாச் செயல்பட வேண்டும் என்றும், அதற்கு ஏற்ப மாநில அரசுகளுக்கு உரிய நிதியை நிர்வாக பகிர்வை மத்திய அரசு வழங்க வேண்டும் என்றும், இந்திய அரசியலமைப்புச் சட்ட வரம்புக்கு உட்பட்டு மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் பொறுப்புகளுடன் மாநில அரசுகள் சுதந்திரமாகச் செயல்படத் தேவையான நிதி பகிர்வுகளும், பொறுப்புகளும் மாநில அரசுகளுக்கு முறையாக வழங்கப்பட வேண்டும் என்றும், நிதிப் பகிர்வு முறையில் கூடுதல் நிதிப் பகிர்வை மாநிலங்களுக்கு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்துவதாக அதிமுக தேர்தல் அறிக்கை கூறுகிறது .

ஒரு முக்கியமான விடயத்தை அதிமுக தேர்தல் அறிக்கை சுட்டிக்காட்டி இருக்கிறது. இந்த ஆண்டு தொகுதிகள் மறு சீரமைப்பு செய்யப்பட இருக்கின்றன . தொகுதிகள் மறுசீரமைப்பில் தமிழ்நாட்டிற்கான தற்போதுள்ள விகிதாச்சார பிரதிநிதித்துவம் குறைந்து விடாமல் இருக்க தொடர்ந்து வலியுறுத்துவோம் என்று கூறியிருப்பது முக்கியமான ஒரு பிரச்சனை குறித்தது ஆகும்.

கல்வி மருத்துவம் போன்ற மனிதவள மேம்பாட்டிற்கு உதவும் முக்கியத்துறைகள் இந்திய அரசியலமைப்பு சட்டம் பொதுப் பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும் என்று கூறுகிறது. வழக்கமான மத்திய- மாநில உறவு பற்றிய கருத்தை மீறிய எதையும் அதிமுக தேர்தல் அறிக்கை முன்வைத்து விடவில்லை. மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையைக்கூட 'ஏற்க முடியாதவற்றை மட்டும் ஏற்காமல் இருக்கும் நிலை பற்றி பேசுகிறது. தமிழ்நாட்டிற்கு அத்தகைய கூறுகளில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்றும், அறிஞர் அண்ணா கண்ட இரு மொழிக் கொள்கைக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இருக்கும் சரத்துகள் ஏற்புடையதல்ல என்றும், அதிமுக தேர்தல் அறிக்கை கூறியிருக்கிறது.

## நாம் தமிழர் கட்சி முன்வைக்கும் தேர்தல் அறிக்கைக் கூறுகள் ஆர் எஸ் எஸ் இன் திட்டங்களை உள்ளடக்கியவை.

இந்தியாவில் இந்துராஷ்டிரத்தை விரைவில் படைத்து விடவேண்டும் என்று ஆர் எஸ் எஸ் விரும்புகிறது. அதற்கான திட்டங்களைப் பல்வேறு கட்சிகள் மற்றும் அமைப்புகள் மூலம் இந்தியா முழுவதும் மக்களிடம் கருத்துப் பரவல் செய்து வருகிறது. ஆர் எஸ் எஸ் பாஜக

தலைவர்கள் நீண்ட காலமாக இந்தியாவில் தற்போது இருக்கும் நாடாளுமன்ற சனநாயக முறையை ஒழித்துக் கட்டிவிட்டு, அதற்குப் பதிலாக 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தியாவில் உள்ள மக்கள் நேரடியாக வாக்களித்து அனைத்து அதிகாரங்களையும் அதிபர் என்ற அந்த ஒற்றை மனிதனிடம் ஒப்படைத்து விடக்கூடிய, அதிபர் ஆட்சி முறையை வலியுறுத்தி வருகிறார்கள். தாங்கள் நினைத்தபடி எந்த சட்டத்தையும் உடனடியாக நடைமுறைப்படுத்திக் கொள்ள முடியவில்லை என்பதால், ஆர் எஸ் எஸ் அமைப்பு அதிபர் ஆட்சி முறையை விரும்புகிறது. தமிழ்நாட்டில் எந்த கட்சியும் பேசாத ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜகவின் எதிர்கால இந்துராஷ்டிரத்தின் அரசு முறையான அதிபர் முறையை நாம் தமிழர் கட்சி மட்டுமே தன் தேர்தல் அறிக்கையில் பேசி இருக்கிறது. சாதாரண மக்களின் பார்வையில் இருந்தும், மேலோட்டமாகப் பார்க்கும் அரசியல் தலைவர்களின் பார்வையில் இருந்தும் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் இந்தத் திட்டம் நீண்டகாலமாக ஆர்எஸ்எஸ் தலைவர்கள் பேசி வரும் திட்டமாகும். இந்திய அரசியல் சட்டம் வழங்கியுள்ள நாடாளுமன்ற சனநாயக முறையைத் தகர்த்து, இந்து மத வெறியர்களின் ஆட்சியையும், இந்தி மொழி ஏகாதிபத்தியத்தையும், இந்து ஏகாதிபத்தியத்தையும் நிரந்தரமாக நிறுவிவிடக்கூடிய திட்டம் இதில் ஒளிந்து கொண்டிருக்கிறது.

2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையிலும் நாம் தமிழர் கட்சி இதே அதிபர் ஆட்சி முறையை வலியுறுத்தி இருந்தது. ஓங்கி குரல் எழுப்பிக்கொண்டு ஆர்ப்பரிக்கும் இளைஞர் கூட்டத்திற்கு நாடாளுமன்ற சனநாயக முறைக்கும் (Parliamentary democracy) அதிபர் ஆட்சி (குடியரசுத் தலைவர்) சனநாயக முறைக்கும் (Presidential democracy) எந்த வேறுபாடும் தெரியாது.

தமிழ்நாட்டில் வேறு எந்தக் கட்சியும் ஏற்காத ஆர்.எஸ்.எஸ்- இன் திட்டமான குடியரசுத் தலைவர் அல்லது அதிபர் முறையை நாம் தமிழர் கட்சி தன் நாடாளுமன்ற தேர்தல் அறிக்கையில் (2024) ஏற்றுப் பேசியிருக்கிறது:

" இந்திய ஒன்றியம் என்பது ஒரு குடியரசு நாடு. ஆனால் இந்நாட்டின் முதல் குடிமகனை குடியரசு தலைவரையே குடிமக்களால் நேரடியாகத் தேர்வு செய்ய முடியாத நம் அமைப்பு முறை குடியரசுக் கோட்பாட்டிற்கு நேர் எதிரானதாகும். அனைத்து சட்டங்களும் குடியரசுத் தலைவரின் கையொப்பத்தினாலேயே செயலாக்கம் பெறுகின்றன. மக்களால் தேர்வு செய்யப்படக்கூடிய ஒருவர் மீண்டும் மக்களைச் சந்தித்துத்தான் வெற்றி பெற வேண்டும் என்ற தேவை இருக்கின்ற வரையில்தான் அம்மக்களின் நலனுக்காக செயலாற்றுவார். எனவே குடியரசு தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்தலின் வழியே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது நாம் தமிழர் கட்சியின் கொள்கை முடிவாகும்."

ஒரு நாசக்காரத் திட்டத்தை நைச்சியமாக பேசி மக்களை ஏற்க வைக்கிற உத்தியை நாம் தமிழர் கட்சித் தலைமை செய்கிறது.

சட்டமன்றத் தேர்தல் அறிக்கை - 2026 இல், "இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டத்தின் படி இந்தியாவின் முதல் குடிமகன் குடியரசுத் தலைவர். அவரே நாட்டின் தலைவராகவும் உள்ளார். ஆனால் அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. இது மக்களாட்சி தத்துவத்திற்கு எதிராக உள்ளது. எனவே நாட்டின் குடியரசுத் தலைவரை மக்களே தேர்ந்தெடுக்கும் படியாக தேர்தல் முறை இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் தமிழர் அரசு இந்திய ஒன்றியத்தின் முன் வைக்கிறது" என்று கூறுகிறது. இத்திட்டமே ஆர் எஸ் எஸ் மற்றும் இந்திய ஒன்றிய பாஜக அரசினுடையதுதான். ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகவத், ஆடிட்டர் குருமூர்த்தி வகையறாக்கள் கூறியதைத்தான் சீமான் செய்கிறார்.

ஆர் எஸ் எஸ் அமைப்பின் அறிவாளர் மற்றும் ஆர்எஸ்எஸ் (சர் சங் சலாக்) கடந்தகால தலைவராகிய குப்பாஹல்லி சீதாராமையா சுதர்சன், "India should consider switching to a presidential form of government for stability," என்று பேசுகிறார். ஆர் எஸ் எஸ் இன் தலைவர் கோல்வால்கர் (1940 - 1973), மேற்கத்திய சனநாயக முறை இந்திய பாரம்பரியத்திற்கு பொருந்தாது என்று கற்பித்தார்.

எல்.கே. அத்வானி, இந்தியாவின் பாராளுமன்ற சனநாயகம் பலவீனமாகச் செயல்படுகிறது; குடியரசுத் தலைவர் முறைக்கு மாறுவது பற்றி விவாதம் தேவை என்றார். சுப்பிரமணியம் சுவாமி இந்தியாவில் அமெரிக்கா போன்ற குடியரசுத் தலைவர் முறை அமல்படுத்தப்பட வேண்டும் என்றார். அமெரிக்காவில் ஒரே மொழி; அங்கு மதப் பிரச்சனையும் இல்லை. ஆகவே அங்கு அதிபர் ஆட்சிமுறை இருப்பதில் சிக்கல் எழவில்லை. ஆனால் இந்தியா பல்வேறு சமயத்தவர்கள் வாழும், பல மொழிகள் பேசப்படும் பெரிய துணைக்கண்டம். அந்தந்த மாநிலத்தில் உள்ள மொழியின மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற சனநாயகத்தைவிடச் சிறந்த முறை இருக்க முடியாது என்பதால்தான், இந்திய அரசியல் சட்டத்தை எழுதும்போது அரசியல் சட்ட நிபுணர்களும் இந்திய அரசியல் ஆளுமைகளும் நாடாளுமன்ற சனநாயக முறையைத் தேர்வு செய்தார்கள். வாஜ்பாயி பிரதமராக இருக்கும்போது ஒரு தப்படி முன் சென்று, நாடாளுமன்ற முறையை கைவிட்டு அதிபர் ஆட்சி முறைக்கு மாறுவதைப் பரிசீலுக்கும் வகையில் ஒரு குழுவையே அமைத்தார். குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் தம் கண்டனத்தைப் பதிவு செய்தவுடன், அக்குழுவின் ஆய்வு வரம்பு மாற்றி அமைக்கப்பட்டது. இப்போது இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் அதிபர் ஆட்சி முறையை ஏற்கும் வகையில் இளைஞர்களின் உளநிலையை மாற்றி அமைப்பதற்காக, தங்களுடைய கைக்கூலிகள் மூலம் கருத்துப் பரவல் செய்து வருகிறார்கள்.

குடியரசுத் தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதாக இருந்தால், இந்தியாவில் இந்தி பேசுகிற ஒருவர்தான் குடியரசுத் தலைவராக வர முடியும்; இந்து மதத்தை சேர்ந்த ஒருவர்தான் குடியரசுத் தலைவராக வர முடியும். அவர்களுக்கு வேறு மதத்தவரின், வேறு மொழியினத்தவரின் ஆதரவு தேவையில்லை; இந்திக்காரர்களும் இந்து மதத்தவரும் மட்டுமே போதும்.

இந்தியாவில் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 79.8% இந்துக்கள்; முஸ்லிம்கள் 14.2%; கிறிஸ்தவர்கள் 2.3%. இந்துக்களுக்கு இந்து மதவெறி பிடித்த சாமியார்கள் தலைமையேற்கிறார்கள். இந்தியாவில் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் 43.63%, இந்தி பேசத் தெரிந்தவர்கள் 57%. இந்தியாவில் பாஜக நேரடியாக 12 மாநிலங்களில் ஆட்சி நடத்துகிறது; பாஜக கூட்டணி மேலும் 5 மாநிலங்களில் ஆட்சி நடத்துகிறது; இவையன்றி , லோக்சபா தேர்தலில் நான்கு மாநிலங்களில் தன்னுடைய பலத்தை பாஜக நிருபித்திருக்கிறது. 2024 தேர்தலில் பாஜக 240 இடங்களை கைப்பற்றியது. அதன் கூட்டணி 293 இடங்களைக் கைப்பற்றி நாடாளுமன்றத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. சனநாயக முறையிலேயே சர்வாதிகாரச் சட்டங்களையும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்திக் கொள்ளக் கூடிய வாய்ப்பு அதற்கு இருக்கிறது. இந்நிலையில்தான் எப்படியாவது அதிபர் ஆட்சி முறைக்கு இந்திய அரசியல் சட்டத்தைக் கொண்டு சென்றுவிட வேண்டும் என்று ஆர் எஸ் எஸ் மற்றும் பாஜக முயற்சி செய்து வருகின்றன. நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் பேசுகிற "ஆட்சி முறை மாற்றம்" என்பது இதுதான். இதை ஒருபோதும் அனுமதித்து விடக்கூடாது.

இது ஆர்எஸ்எஸ் இன் வேலைத்திட்டங்களில் மிக முக்கியமானது. தமிழ்நாட்டில், இந்தச் சூழ்ச்சிகரத் திட்டத்தைத் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் தங்களுடைய கொள்கை முடிவாக அறிவித்திருக்கும் கட்சி நாம் தமிழர் கட்சி மட்டுமே. இந்த அபாயத்தை உணராதவர்கள்தாம் கைத்தட்டுகிறார்கள்; ஆர்ப்பரிக்கிறார்கள்; குதூகலம் அடைகிறார்கள்; தமிழ்நாட்டை, தமிழினத்தை, தமிழ் மொழியைக் காக்க வேண்டும் என்று நினைக்கும் எவரும் குடியரசுத் தலைவர் முறை என்ற திட்டத்தை எவர் கைக்கொண்டாலும் அவர்களைப் புறக்கணிக்க வேண்டும். கிடைத்த உரிமைகளைக் கோட்டை விட்டுவிட்டு, பிறகு குமுறிக்குமுறி அழுது பயனில்லை. அரசியல் சட்டம் நமக்கு வழங்கி இருக்கக்கூடிய அத்தனை உரிமைகளும் கண்ணிமைக்கும் நேரத்தில் காணாமல் போகும் என்பதை உணர வேண்டும்.

ஆர் எஸ் எஸ் அமைப்புத் தலைவர்கள் அறிவாளிகள்தாம். பேச்சிலும், எழுத்திலும் வல்லவர்களைக் கைக்குள் போட்டுக் கொண்டு தங்கள் நாசகாரத் திட்டங்களை இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் நடைமுறைப்படுத்த முயன்று வருகிறார்கள். இந்தியாவுக்கு நாடாளுமன்ற சனநாயக முறை ஒத்து வராது என்றும், அது தோற்றுப் போய்விட்டது என்றும், அதிபர் ஆட்சி முறையைக் கொண்டு வர வேண்டும் என்றும், ஆர்எஸ்எஸ் தலைவர்களும் பாஜக தலைவர்களும் தொடர்ந்து பேசி வருகிறார்கள்.

## சீமான் - மணியரசன் பேசும் தமிழ்த் தேசியம் பல்லிளிக்கிறது!

அறிஞர் அண்ணாவைத் தொடர்ந்து 1969 - இல் ஆட்சிப் பொறுப்பேற்ற கலைஞர் மு கருணாநிதி, 1969இல் மத்திய - மாநில உறவுகளைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு குழுவினை தமிழக அரசு நியமிக்கும் என அறிவித்தார். அதன்படியே நீதியரசர் ராசமன்னார் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரைகளின் அடிப்படையில்

1974 ஏப்ரல் 16ஆம் நாள் சட்டமன்றத்தில் தீர்மானம் முன்வைக்கப்பட்டது. தீர்மானத்தின் மீது ஐந்து நாட்கள் விரிவான விவாதம் நடத்தப்பட்டு 1974 ஏப்ரல் 20 ஆம் நாள் மாநில சுயாட்சித்

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானம் முக்கியமானது; இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்களுக்கும் முன்னோடியானது. தீர்மானம் இப்படிப் பேசுகிறது:

"நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவுகள், மாநிலங்களுக்கு இடையே போக்குவரத்துத் தொடர்புகள், நாணய செலாவணி ஆகியவைத் தொடர்பான அதிகாரங்களை மட்டும் கொண்ட மத்திய அரசும், எஞ்சிய அதிகாரங்கள் உட்பட ஏனைய அதிகாரங்கள் அனைத்தும் கொண்டுள்ள மாநில அரசுகளும் உள்ள உண்மையான கூட்டாட்சியை நிறுவும் இலட்சியத்துடன், தமிழ்நாடு அரசு அரசியலமைப்புச் சட்ட பிரிவுகளிலும் அதிகாரப் பட்டியல்களிலும் செய்யப்பட வேண்டிய திருத்தங்களை வகுத்து தொகுத்துள்ளது."

கலைஞர் கருணாநிதியின் அரசு முன்வைத்த இந்த மாநில சுயாட்சி தீர்மானம் என்பது மாநில சுயாட்சித் தீர்மானம் மட்டுமே. இதில் தமிழ்த்தேசியத்தின் இலக்கு இல்லை. கலைஞர் கருணாநிதியின் மாநில சுயாட்சி தீர்மானத்தைக் களவாடி, அது தாங்கள் சொந்த கண்டுபிடிப்பு போலவும், அதுதான் தமிழ்த்தேசியம் என்பது போலவும் நாம் தமிழர் கட்சி நீட்டி முழக்குவது நகைப்புக்குரியது . கலைஞர் கருணாநிதி அரசு காலத்தில் திமுக நிறைவேற்றிய மாநில சுயாட்சி தீர்மானத்தை ஆதரிக்கிறோம் - என்று தான் சீமானும், ஐயா மணியரசனும் பேசியிருக்க வேண்டும். அதே மாநில சுயாட்சி தீர்மானத்தைத் தான் இவர்கள் பேசுகிறார்கள். ஆனால் அதுதான் தமிழ்த்தேசியம் போல நாடகமாடுகிறார்கள்.

"நாம் தமிழர் கட்சிக்கு, நாம் ஏன் வாக்களிக்க வேண்டும்?", என்று ஐயா மணியரசன் எழுதியுள்ள ஒரு அறிக்கையில்,

தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் நிலைப்பாடாக இப்படி கூறுகிறார்: 'இறையாண்மையுள்ள தேசிய இனங்களின் கூட்டரசாக இந்தியாவை மாற்றி அமை! அப்படி உருவாகும் இந்தியக் கூட்டரசுக்குப் பாதுகாப்புத் துறை, வெளிநாட்டு உறவு, நாணய அச்சடிப்பு போன்ற சில அதிகாரங்கள் மட்டுமே இருக்க வேண்டும். மற்ற அதிகாரங்கள் அந்தந்தத் தேசிய இன அரசுகளுக்கு இருக்க வேண்டும்..." என்று கூறியிருக்கிறார்.

**சட்டமன்ற தேர்தல் அறிக்கை 2026 இல் நாம் தமிழர் கட்சி இவ்வாறு கூறுகிறது :**

"ஒன்றியத்தில் கூட்டாட்சி, மாநிலத்தில் தன்னாட்சி- என்ற முழக்கத்தோடு, அனைத்து வகையான துறைகளுக்கும் சட்டம் இயற்றும் அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு என்கிற வகையில், இந்திய ஒன்றிய அரசியலமைப்பு சட்டத்தில் உரிய மாற்றம் கொண்டுவரப் பாடுபடுவோம்.

ஒன்றிய அரசிற்குப் படைத்துறை, நாணயம், உள்ளூர் தொடர் வண்டி நீங்கலாக மாநிலங்களுக்கிடையிலான பயணிக்கிற தொடர்வண்டி, மாநில அரசின் ஒப்புதலோடு கூடிய வெளியுறவுத்துறை - போன்ற துறைகளைத் தவிர மற்ற அனைத்து துறைகளிலும் சட்டம் இயற்றி நடைமுறைப்படுத்துகிற உரிமை மாநில அரசுக்கு உண்டு என்கிற நிலையை உரிய சட்ட மாற்றங்கள் மூலம் ஏற்படுத்த நாம் தமிழர் அரசு பாடுபடும். "

ஐயா மணியரசன் அவர்களும், சீமான் அவர்களும் ஒரே முகாமை சேர்ந்தவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இவர்கள் அனைவருமே கலைஞர் கருணாநிதி அவர்களின் மாநில சுயாட்சி தீர்மாணத்தைக் களவாடித்தான் தங்கள் தத்துவமாக வைத்துக் கொள்கிறார்கள் என்பதை அவர்களே வாக்குமூலத்தின் மூலம் உறுதிப்படுத்தி இருக்கிறார்கள்.

இவர்கள் பேசுவது கலைஞர் கருணாநிதி அவர்கள் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய மாநில சுயாட்சி தீர்மானம்தானே ஒழிய, இதுவே தமிழ்த் தேசிய இலக்கு ஆகிவிடுமா ? ஆம் என்று கூறினால், 1974 சட்டமன்ற மாநில சுயாட்சி தீர்மானம் தமிழ்த்தேசிய தீர்மானமா ? அவ்வாறெனில் கலைஞர் கருணாநிதிதான் தலைமை தமிழ்த்தேசியவாதியா ? ஐயா மணியரசன் - சீமான் ஆகியோர் கலைஞர் கருணாநிதி வழியில்தான் நடந்து கொண்டிருக்கிறார்களா ? அவர்தான் இவர்களுக்குத் தமிழ்த்தேசியக் குருமாரா ? தமிழ்த் தேசியம் பேசுவதாகக் கூறிக்கொண்டு, திமுகவின் கடந்த கால மாநில சுயாட்சி கோரிக்கையை முன்னிறுத்துவது சரிதானா?

**"ஐயா மணியரசன் தன் அறிக்கையில் மேலும் கூறுகிறார்:**

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய, உலகின் மூத்த குடியாக விளங்கும் தமிழர்களின் - தமிழ்த்தேசியத்தை ஏந்தி செந்தமிழன் சீமான் தலைமையில் நாம் தமிழர் கட்சி தனித்துப் போட்டியிடுகிறது.

பாரத்தீய, திராவிடத்தீய அயலார் ஆதிக்கம் சுமக்கும் அடிமை அரசியலில், நாம் தமிழர் கட்சி மூழ்கவில்லை!

... தமிழ்த்தேசியப் பேரியக்கம் உங்களை உறவுரிமையுடன் கேட்டுக் கொள்கிறது. நாம் தமிழர் கட்சியின் "விவசாயி'' சின்னத்தில் வாக்களியுங்கள்! அக்கட்சியை ஆட்சியில் அமர்த்துங்கள்! " என்கிறார்.

ஐயா மணியரசன் முன்வைக்கும் "நான்கு அதிகாரங்கள் தவிர- கோட்பாடு" - தான் தமிழ்த்தேசியத்தின் இலக்கா? அதுதான் இவர்கள் பேசும் தமிழ்த் தேசியத்தின் அடிப்படையா ? இதைத்தானே முன்பு காங்கிரஸ்காரர்களும் பேசினார்கள்; திராவிடக் கட்சிக்காரர்களும் பேசினார்கள். "திராவிடதீய அயலார் ஆதிக்கம் சுமக்கும் அடிமை அரசியலில் நாம் தமிழர் கட்சி மூழ்க வில்லை" என்று ஐயா மணியரசன் சான்று வழங்குகிறாரே, திராவிட திமுக நிர்ணயித்த இலக்கைத்தானே சீமான் மட்டுமின்றி, ஐயா மணியரசனும் தூக்கிச் சுமக்கிறார்.

கூடுதலாக, இப்போது ஆர்எஸ்எஸ் அமைப்பு வகுத்திருக்கும் இந்தியாவில் நாடாளுமன்ற ஆட்சி முறையை ஒழித்துக் கட்டிவிட்டு அதிபர் ஆட்சி முறையை நிறுவுவது என்ற நாசகார திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் சீமானுக்கு அருந்துணையாக மணியரசன் ஐயா களமிறங்கி இருக்கிறார். ஐயா மணியரசன் அது ஆர் எஸ் எஸ் திட்டம் என்பதை அறிந்துதான் ஆதரிக்கிறார். "தமிழ் இந்து"வாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளக் கூடிய ஒருவர், இந்தியாவுக்கு அதிபர் முறையை ஆதரிப்பதில் வியப்பில்லை.

**ஆர் எஸ் எஸ் - இன் மொழிக் கொள்கையே**

**நாம் தமிழர் கட்சியின் மொழிக் கொள்கை!**

இவர்கள் முன்னிறுத்தும் மொழிக் கொள்கை (தேர்தல் அறிக்கை பக்கம் 315) , ஆர் எஸ் எஸ் இன் இலக்கிற்கு மிக நெருக்கமானது. மும்மொழித்திட்டத்தைத்தான் இவர்கள் வலியுறுத்துகிறார்கள். மூன்று மொழிகள் கற்பிக்கப்படும் என்று பேசிவிட்டு, அது ஒரு மொழிக்கொள்கை என்று பித்தலாட்டம் வேறு செய்கிறார்கள். திராவிட கட்சிகள் இரு மொழிக் கொள்கையில் நிற்கிறார்கள். நாம் தமிழர் கட்சி ஆவணம் இப்படி பேசுகிறது :

" தமிழ் பயிற்று மொழியாகவும், ஆங்கிலம் கட்டாயப் பாட மொழியாகவும், உலகின் அனைத்து மொழிகளும் விருப்ப மொழியாகப் பயிற்றுவிக்கப்படும்."

இந்தி கற்பிக்கத்தான் ஆசிரியர்கள் கிடைப்பார்களே ஒழிய, காங்கோ காட்டு குள்ளர்களின் மொழியைக் கற்பிக்க ஆசிரியர்கள் இங்கே கிடைக்க மாட்டார்கள். உலகின் எந்த மொழி மக்களால் ஏற்கப்படும் ? ஆங்கிலம், பிரெஞ்சு அல்லது செர்மன் மொழி மட்டுமே. மற்றபடி இங்கே இந்திதான் மூன்றாவது மொழியாகக் கற்பிக்கப்படும் என்பது தெரிந்துதான் சீமான் இந்த மொழிக் கொள்கையை வகுத்திருக்கிறார். இதைத்தான் ஐயா மணியரசனும் ஆதரிக்கிறார்.

*இவர்களுடைய அதிகபட்ச தமிழ்த் தேசிய இலக்கு அரசியல் சட்டப் பிரிவு 370 ஆம்!*

**நாம் தமிழர் தேர்தல் அறிக்கை (பக்கம் 431) இப்படி பேசுகிறது:**

இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 370 போன்றதொரு சட்டத்தைத் தமிழ்நாட்டுக்கு உருவாக்கிட அனைத்து வழிகளிலும் நாம் தமிழர் அரசு உறுதியாக தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுக்கும். இதன் மூலம் ஒன்றிய அரசின் சட்டங்கள் எவையும் தமிழ்நாட்டிற்கு பொருந்தாது ... "

இந்திய அரசியல் சட்டக் கூறும் 370 என்ன ஆனது? காஷ்மீரின் நிலை என்ன ஆனது? என்பது கூட இவர்களுக்குத் தெரியவில்லை. காஷ்மீர் இன்று மாநிலத் தகுதியையே இழந்து நிற்கிறது. பிரிவு 370 ஒழித்துக் கட்டப்பட்டு விட்டது. ஒன்றிய அரசு நினைத்தால் ஒரு மாநிலத்தை எத்தனைக் கூறுகளாக வேண்டுமானாலும் பிரிக்கலாம். தமிழ்நாட்டை மூன்றாகப் பிரிக்க வேண்டும் என்றார்கள்; இப்போது சிலர் ஐந்தாகப் பிரிக்க வேண்டும் என்கிறார்கள். அவற்றுக்கு ஜனப்பதா (Janapada)என்று பெயரிட ஆர்எஸ்எஸ் காத்திருக்கிறது. இந்நிலையில்தான் சீமான் தமிழ்நாட்டிற்கு ஐந்து தலைநகரங்கள் வேண்டும் என்று பேசுகிறார். கணினி மூலம் இணையதளத்தைப் பயன்படுத்தி அமெரிக்காவுக்கே கணக்கை எங்கிருந்து பார்க்கிறார்கள். அனைத்து துறை சார்ந்த உயர் அதிகாரிகளும் அமைச்சர்களும் ஒரே இடத்தில் இருப்பது பெரிய நிர்வாக வசதி. சுல்தான்கள் காலத்திலிருந்ததுபோல ஆங்காங்கே கோட்டைகளைக் கட்டி, அங்கே ஆளுநர்களை நிறுத்த வேண்டிய அவசியமே இப்போது இல்லை. புதிதாக எதையாவது சொல்லி விட வேண்டும் என்பதற்காகத் தேவையில்லாததை எல்லாம் பேசுகிறார்கள்.

குமரி மாவட்டத்தில் ஆர்எஸ்எஸ் காரர்கள் விவேகானந்தர்

நினைவிடத்தை மையமிட்டு பெருந்திரளாக குடியேறி விட்டார்கள். தென்னிந்தியாவின் ஆர்எஸ்எஸ் தலைமையகமாக கன்னியாகுமரியை மாற்றி இருக்கிறார்கள். அதுதான் தமிழ்நாட்டின் தத்துவார்த்த தலைநகர் என்கிறார் சீமான். இன்னிலையில்தான் தமிழ்த் தேசியவாதிகள் மிக கவனமாக நிமிர்ந்து நின்று போராட வேண்டி இருக்கிறது. ஆனால் தமிழ்த் தேசியம் என்ற பெயரில் இளைஞர்களை முடக்குவாதத்திற்குள் முக்கி எடுக்கிறார்கள். இந்திய அரசியல் சட்டம் சரத்து 370 மூலம் தனித்தகுதி வழங்கி இருந்த நிலையில்தான் காஷ்மீர தேசியவாதிகள் தங்களுடைய சுயநிர்ணய உரிமை கோரி ஆயுதம் ஏந்திப் போராட்டக் களத்தில் நின்றார்கள். அதுதான் காஷ்மீரத்தேசியம். அதே இலக்கு தான் தமிழ்த் தேசியத்திற்கும் இருக்க முடியும். காஷ்மீர் மக்கள் சரத்து 370 -க்காகத் தான் போராடினார்களா? அதை ஏற்காமல் தான் போராடினார்கள். ஆனால் இங்கு போராட்டத்தின் இலக்கே சரத்து 370 தான் என்கிறார்கள் சனாதனத் தமிழ்த் தேசியவாதிகள்.

ஆர் எஸ் எஸ் இன் இன்னொரு திட்டத்தையும் நாம் தமிழர் கட்சியின் தேர்தல் அறிக்கை புதைத்து வைத்திருக்கிறது. நவோதயா பள்ளிகள் புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில் இந்தியா முழுவதும் திணிக்கப்பட்டபோது, தமிழ்நாட்டில் பெரிய எதிர்ப்பு எழுந்தது. 1986 - இல் எம்.ஜி.ஆர் முதலமைச்சராகவும், கலைஞர் கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்தபோது நவோதயா பள்ளிகளை எதிர்த்துப் பெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தது. இதன் விளைவாக, தமிழ்நாடு அரசு நவோதயா பள்ளிகள் அமைப்பதை ஏற்கவில்லை. இப்போதும் கூட, இந்தியாவிலேயே நவோதயா பள்ளிகள் இல்லாத ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமே. சமீபத்தில் உச்சநீதிமன்றம் கூட தமிழ்நாடு அரசிடம் நவோதயா பள்ளிகளுக்கு இடம் மட்டும் ஒதுக்கித் தாருங்கள், போதும் என்று ( நீதிபதி நாகரத்னா) கேட்டுக் கொண்டது. அதை மறுத்து மீண்டும் தமிழ்நாடு அரசு மனு செய்திருக்கிறது. இன்னிலையில் ஆர் எஸ் எஸ் இன் கூலிப்படையாக நாம் தமிழர் கட்சியைக் களம் இறக்கி தமிழ்நாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் சீமானின் தேர்தல் அறிக்கை நவோதயா பள்ளி குறித்து இப்படிக் குறிப்பிடுகிறது:

"தமிழகத்தில் உள்ள நவோதயா மற்றும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் கட்டாய பாட மொழியாக பயிற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்."

இதன் பொருள் என்ன? தமிழ்நாட்டில் நவோதயா பள்ளிகள் கொண்டுவரப்படும். அதில் தமிழும் ஒரு பாடமாக கற்பிக்கப்படும் என்பதுதான். நவோதயா பள்ளிகளே இல்லாத நிலையில் நவோதயா பள்ளிகளுக்கு வக்காலத்து வாங்கிப் பேசும் நாம் தமிழர் கட்சி ஆர் எஸ் எஸ் ஆடிட்டர் குருமூர்த்தி வகையறாக்களுக்கு விசுவாசமாகவே தேர்தல் அறிக்கையை தயாரித்து இருக்கிறது.

## குலத்தொழில், குலதெய்வத்தொழில் ஆர்எஸ்எஸ் திட்டம் இல்லையா?

சாதி அடிப்படையில் மக்கள் மீது திணிக்கப்பட்டிருந்த குலத்தொழிலை ஒழித்துக் கட்ட மாபெரும் தலைவர்கள் படாதபாடு பட்டிருக்கிறார்கள். இந்நிலையில் இப்போது பாசிச - பாஜக அரசு விசுவகர்ம யோஷனா என்ற பெயரில் கோடிக்கணக்கில் பணம் தருகிறேன் குலத்தொழிலை செய்! என்று மீண்டும் குலத்தொழிலுக்குள் ஓரளவு சமூக விடுதலை பெற்றிருக்கும் மக்களைத் திணிக்கப் பார்க்கிறது. எசமானர்களின் கட்டளையை ஏற்று, "குலத்தொழிலைச் செய்! அது குலத்தொழில் அல்ல, குல தெய்வத் தொழில்!" என்கிறார் சீமான்.

ஆடு மாடு மேய்ப்பது அரசாங்க வேலை என்கிறார் சீமான். "வீட்டில் ஒருவருக்கு அரசு வேலை ஆடு மாடு வளர்த்தல், தேனீக்கள் வளர்த்தல், நாட்டுக்கோழி வளர்த்தல், கழுதை வளர்த்தல், பன்றி வளர்த்தல், எல்லாவற்றையும் அரசு வேலையாக மாற்றுவேன்" என்கிறார். அவர் சொல்லுகிற கணக்குப்படியே, தமிழ்நாட்டில் இருக்கும் நிலப்பரப்பு, அதில் தனியாருக்குச் சொந்தமானது நீக்கி, மீதி உள்ளவற்றில் ஆறு, குளம், ஏரி, சாலை எனப் பொதுப் பயன்பாட்டில் இருப்பவற்றையும் கணக்கிட்டு நீக்கி, மீதியுள்ளவற்றில் பண்ணைகள் அமைக்க உள்ள வாய்ப்புகளையும் பரிசீலித்தால்' எத்தனை ஆயிரம் பேருக்கு வேலை கொடுக்க முடியும்? எத்தனை இலட்சம் பேராக இருந்தாலும் அரசு வேலை கொடுப்பேன் என்கிறார் சீமான்; அதற்கான திட்டத்தை அவரால் வழங்கவே முடியாது.

சீமான் பன்றி வளர்ப்பதையும் கழுதை வளர்ப்பதையும் அரசு வேலை என்கிறார். ஆனால் திராவிட கட்சிகளோ, தொழில்நுட்ப விற்பனர்களாக இளைஞர்களை மாற்றும் முயற்சியில் இருக்கின்றன. கல்லூரிக்குப் படிக்க வந்தால் மாதம் ரூபாய் 1500 என்று கூறுவது இலவசமாகச் சிலருக்கு தோன்றலாம். ஆனால் இத்திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகு உயர்கல்விச் சேர்க்கை 29 விழுக்காடு உயர்ந்துள்ளது. ஆய்வாளர்கள் இன்னும் பத்து ஆண்டுகளில் இத்திட்டம் தொடரப்படுமானால் தமிழ்நாட்டின் கல்விநிலை ஐரோப்பாவுக்கு இணையாக இருக்கும் என்று பதிவு செய்கிறார்கள். இப்போது இருக்கும் ஆண்டு வளர்ச்சி விகிதம் 9 விழுக்காடு; இது தொடருமானால் 2047 இல் 4 டிரில்லியன் பொருளாதாரத்தை எட்டும் என்று பி. டி. ஆர் பழனிவேல் தியாகராசன் கூறுகிறார்.

ஆர் எஸ் எஸ் இன் அரசியல் பிரிவான பாஜகவின் பாசிச அரசு 'இந்துராட்டிரம்' நோக்கிய பயணத்தை விரைவுபடுத்தி இருக்கிறது. அதற்கான திட்டங்கள் நாம் தமிழர் கட்சியின் தேர்தல் அறிக்கையில் உள்ளன. இதைத்தான் சீமானும், ஐயா மணியரசனும் முன்னெடுத்துச் செல்கிறார்கள். தமிழ்த் தேசிய இனம் மிகக் கவனமாக இருக்க வேண்டும். வெற்றுச் சொல்லாடல்களையும், கதாநாயகத்தனமான உடல் மொழிகளையும், அடிவயிற்றிலிருந்து ஆங்காரமாகக் கத்தும் மனோகரா, வீரபாண்டியக் கட்டபொம்மன் வீரவசனங்களையும் கேட்டு, யாருக்கு வாக்களிப்பது என்று முடிவு எடுக்காமல், தமிழ் மக்கள் அறிவு பூர்வமாக சிந்தித்து, பாசிச பாஜகவையும் மற்றும் அதன் நிழல் அமைப்பான நாம் தமிழர் அமைப்பையும் நிராகரித்து, தமிழகத்தின் வருங்கால தலைமுறைகளின் ஒளிமயமான எதிர்காலத்தை உறுதி செய்யும் வகையில் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் .

தமிழ்த் தேசியர்களைப் பொறுத்தவரை, இறையாண்மை உள்ள தமிழ்த் தேசம்தான் இலக்கு. அந்த இலக்கை எட்டுவதற்கு முன் உள்ள இடைப்பட்ட காலத்தில், இப்போது இருக்கும் தமிழகத்தைச் சிதைத்து இல்லாமலே ஒழித்துவிட அனுமதித்து விடக்கூடாது என்பதைக் கவனத்தில் கொண்டு, கபளீகரம் செய்ய காத்திருக்கும் இந்து- இந்தி ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்தும், இந்துராட்டிர சனாதனிகளிடமிருந்தும், பார்ப்பன பாசிசவாதிகளிடமிருந்தும். ஆர்எஸ்எஸ் இன் நிழல் அமைப்புகளிடம் இருந்தும் காக்கும் வகையில், மக்களுக்குச் சரியான வழிகாட்டுதலை வழங்கும் கடமை தமிழ் தேசியர்களுக்கு இருக்கிறது.

**தமிழ்நாடு இதழுக்காக அண்மையில் நன்கொடை வழங்கியவர்கள்**

| | |
|---|---|
| திரு. தென்முகநம்பி, சென்னை | 1000 |
| தோழர் செங்குட்டுவன், ஆவடி | 500 |
| திரு. பிச்சைவள்ளிநாயகம் | 500 |
| முனைவர் முத்தமிழ், தஞ்சை | 500 |
| திரு. காஞ்சி அமுதன் | 1500 |
| திரு. மணிவண்ணன், சென்னை | 500 |
| திரு. ஆற்றல்ரசு, சென்னை | 500 |
| திரு. சுகுமாரன், சென்னை | 500 |

நூல் அஞ்சல்

பெறுநர்:

விடுநர்:
தமிழ்நாடு, 4/197, பல்லவன் நகர், 3 ஆவது தெரு,
மேடவாக்கம், சென்னை 600100 கைபேசி 97108 75283,

வெளியீட்டுக் குழு : பொழிலன், பேரா. த. செயராமன், முத்தமிழ், கண. குறிஞ்சி, நிலவழகன், பாவெல்
தமிழ்நாடு (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874
(கீற்று இணையதளத்திலும் பார்க்கலாம்) l ¡ ù..ê™: thamizhnadu2051@gmail.com
அச்சிட்டோர் : மூகாம்பிகை அச்சகம், 24, வாணிபர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005